ஸ்ரீ:

# உறையூர் நாச்சியாரும் பங்குனி உத்தரமும்

[உறையூர் நாச்சியார் சரித்திரத்தோடு பங்குனித் திருநாளில் நடக்கும் காரியம் முழுவதும் இதில் எழுதப்பட்டிருக்கிறது. "மட்டையடி" புஸ்தகமும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது.]

SRIRANGAM DEVASTHANAM LIBRARY SERIES.

The Wednesday Review Press,
Trichinopoly.

1937] [விலை அணா 1

BOARD OF TRUSTEES

1. Parasara Srirangaraja Bhatter Swami.

2. M. S. Raghunatha Thathachariar Swami.

3. S. Ranganatha Iyer B.A.

4. K. Chinnasawmi Udayar.

5. N. P. Kalyanasundara Mudaliar, B.A.,B.L.,
[Executive Trustee & Trustee in charge
of the Library & Museum].

Author:

S. PARTHASARATHI IYENGAR
Sahitya Siromani,
Editor: Devasthana Patrika
Hon. Librarian, Devasthanam Library & Museum.

ஸ்ரீ:

# உறையூர் நாச்சியாரும் பங்குனி உத்தரமும்

[உறையூர் நாச்சியார் சரித்திரத்தோடு பங்குனித் திருநாளில் நடக்கும் காரியம் முழுவதும் இதில் எழுதப் பட்டிருக்கிறது. "மட்டையடி" புஸ்தகமும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது.]

SRIRANGAM DEVASTHANAM
LIBRARY SERIES.

**The Wednesday Review Press,**
**Trichinopoly.**

தாது, 1937] [அணா 1

# அட்டவணை


| | | |
|---|---|---|
| 1. | நிசுளாபுரி மாஹாத்மியம் | 1 |
| 2. | திவ்யஸூரி சரிதம் | 3 |
| 3. | கோயிலொழுகு | 4 |
| 4. | வக்ஷ்மீ காவ்யம் | 5 |
| 5. | ஸ்ரீரங்கராஜ சரித பாணம் | 20 |
| 6. | ஆதிப்ரம்மோத்ஸவம் | 29 |
| | பங்குனி உத்தரம் | |
| | பிரணய கலஹம் | |
| 7. | உறையூர்ச் சரித்திரம் | 44 |
| 8. | கோயில் ஜீர்ணோத்தாரணம் | 46 |

ஸ்ரீ:

# உறையூர் நாச்சியாரும் பங்குனி உத்தரமும்

*[உறையூர் நாச்சியாரைப்பற்றி இதுவரையில் கிடைத்த ஆதாரங்கள் ஐந்து. இவைகளில் ரங்கநாதனுடைய பங்குனி உத்ஸவம் முழுவதும், அவர் உறையூர் நாச்சியாரைக் கலியாணம் பண்ணிக்கொண்ட விவரமும் நன்றாய்ச் சொல்லப் படுவதால் அவை உள்ளபடியே இங்கு எழுதப்படுகின்றன.]*

## 1. நிசுளாபுரி மாஹாத்மியம்

*[இந்த மாஹாத்மியம் காகிதத்தில் எழுதிய பிரதி ஒன்று தான் கிடைத்தது. சென்னையிலும் தஞ்சாவூரிலுமுள்ள ராஜாங்க புஸ்தகசாலைகளில் இது கிடைக்கவில்லை. மூன்று அத்தியாயமாயுள்ள இது பரீதாவி வருஷத்தில் ஸ்ரீரங்கம் கீதாபாஷ்யம் ரங்காசாரியரால் தமிழில் எழுதி அச்சிடப்பட்டிருக்கிறது. இதிலுள்ளபடி நாச்சியாரின் சரித்திரம் பின்வருமாறு.]*

1-ம் அத்—திரிசிரனுடைய திரிசிர பர்வதமென்னும் திருச்சி மலைக்கோட்டையைச் சுற்றியுள்ள பிரதேசம் **கரன்** என்னும் ராக்ஷஸனுடைய வாஸஸ்தானமாய் காரண்யமாயிருந்தது. அகஸ்தியர் கரனை வடக்கே அனுப்பி அவ்விடத்தை ரிஷிகளின் தபஸ்ஸுக்கு விரோதமில்லாமல் செய்தார்.

**2-ம் அத்.**—பிரம்மா, விஷ்ணு, சிவன்—இம் மூவரில் யார் பெரியவர்—என்று அறிவதற்காக **பிருகு** மஹரிஷி காலையில் சிவனிடம் போனார். அவர் பார்வதி

மீயாடு கிரீடித்துக்கொண்டு ரிஷிக்கு தரிசனம் கொடுக்கவில்லை. ரிஷி பிரம்மாவினிடம் போய், அவர் கர்மானுகுணமாக ஸ்ருஷ்டி செய்துகொண்டேயிருப்பது கண்டு அவரும் பரவஸ்து வல்லவென்று நிச்சயித்து, ஸாயங்காலம் விஷ்ணுவினிடம் போனார். விஷ்ணு பிருகுவை உபசரித்து, வந்த காரியம் வினவுகையில், தனியாய்த் தெரிவிக்க வேண்டுமென்றார் ரிஷி. எல்லாரும் அப்பால் சென்றார்கள். காந்தனோடு ஏகாந்தமாயிருக்கும் ஸமயம் அதுதானென்று கண்ட லக்ஷ்மி பிருகுவை அப்பால் போகச் சொன்னாள். பிருகு கோபித்துக்கொண்டு, மனுஷிய ஜாதியில் பிறப்பாய் என்று சபித்து, விஷ்ணுவே பரதத்வம் என்று சொல்லிக்கொண்டு போனார். லக்ஷ்மி ரிஷியின் சாபத்தினால் மிகவும் கவலைப் பட்டாள்.

விஷ்ணு—பிருகு சாபம் தப்ப முடியாது. பூலோகத்தில் பிறந்திரு. நானும் அங்கே வந்து உன்னைக் கலியாணம் செய்துகொள்கிறேன். கொஞ்ச நாள் பூலோகத்திலிருந்து இங்கே வருவோம்.

லக்ஷ்மி—கேவலமான மனுஷ்யனுக்கு நான் எவ்விதம் பிறப்பது!

விஷ்ணு—கராஸுரனை அகஸ்தியர் வடக்கே அனுப்பிக் காரரண்யத்தை ரிஷிவாஸத்துக்குத் தகுதியாக்கினபிறகு, சோழராஜனான தர்மவர்மா என்னும் பக்தன் கும்பகோணத்தைவிட்டுக் காவேரியின் தென் கரையில் நகரம் ஸ்தாபித்துத் தன் பத்தினி நிசுளையின் பெயரால் நிசுளாபுரி எனப் பெயரிட்டு அரசு செலுத்து

கிறான். அவனும் மனைவியும் ஸந்ததியில்லாக் குறையி ஞல் லக்ஷ்மீதந்த்ரம் என்னும் சாஸ்திரத்தின்படி உன்னைப் பூஜிப்பார்கள். நீ அவர்களுக்குப் பெண்ணாய் பிற—நானும் அங்கே வருகிறேன்.

3-ம் அத்—அப்படியே நிசுளாதேவியின் கர்பத்தில் சித்திரை, சுக்லத்வாதசி, உத்தரம்—கூடிய வெள்ளிக் கிழமையில் லக்ஷ்மி அவதரித்தாள். அவளுக்கு வாஸலக்ஷ்மி எனப் பெயரிடப்பட்டது. பிறகு சந்திர திலகன் என்ற புத்திரன் பிறந்தான். தர்மவர்மா ரங்கநாதனிடம் உத்தமமான பக்தனாயிருந்தான். வாஸலக்ஷ்மி ரங்கநாதனையே விரும்பிக் கலியாணம் செய்து கொண்டாள்.

[மீனாக்ஷிஸுந்தரம் பிள்ளை எழுதிய உறையூர்ப்புராணம் உறையூர் நாச்சியாரைப்பற்றியதல்லவாகையால் இங்கு சேர்க்கப்படவில்லை. அது பஞ்சவர்ணஸ்வாமி காந்திமதியம்மன் விஷயம்.]

---

## 2. திவ்யஸூரி சரிதம்

தர்மவர்மாவின் வம்சத்தவனான நந்த சோழனுக்கு உறையூர் நாச்சியார் கிடைத்ததாகக் கோயிலொழுகு; தர்மவர்மாவுக்குக் கிடைத்ததாக திவ்யஸூரி சரிதம் 7-ம் ஸர்கம். மற்றை விவரம் கோயிலொழுகு போலவே. உடையவர்காலத்தில் உத்தம நம்பி வம்சத்திலிருந்த கருடவாஹன பண்டிதரால் ஆழ்வார் ஆசார்யர்களின் சரித்திரம் இந்தக் காவ்யமாக எழுதப்பட்டது.

---

## 3. கோயிலொழுகு

"நிசுளாபுரியிலே தர்மவர்மாவின் வம்சரான நந்த சோழன் ராஜ்யம் பண்ணுகிற காலத்தில் பஹுகாலம் அநபத்யனாயிருந்து ஸ்ரீரங்கநாயகரிடத்திலே அதிப் பிரவணனாய் தபஸ்ஸைப் பண்ணி, அந்த தபோபலத்தி னாலே ஒருநாள் தாமரை ஓடையில் தாமரைப்பூவிலே ஒரு சிசுவாக ஸ்திரீ ப்ரஜை இருக்கக்கண்டு, அந்த ராஜா ஹ்ருஷ்டனாய், அந்தக் குழந்தையைத் தம்முடைய கிருஹத்திலே கொண்டுவந்து கமலவல்லியென்று நாம கரணம் பண்ணி வளர்க்குமிடத்தில்,—அந்தக்குழந்தை யும் வளர்ந்து பெரியவளாய் ஒத்த பெண்களுடனே விளையாடும் காலத்திலே,—ஒருநாள் தோழிகளுடனே லீலோத்யாநத்தில் புஷ்பாபசயம் பண்ணுகிற ஸமயத் திலே,—ஸ்ரீரங்கராஜர் குதிரை நம்பிரான்மேலே ஏறி யருளி பலாச தீர்த்தத்துக்கு (சீயர்புரத்துக்கு) வேட்டை எழுந்தருளுகிறவர் அந்தக் கமலவல்லிக்கு அதிஸுந்தரராய் விபவாவதாரமாக ஸேவை சாதிக்க, கமலவல்லி கண்டு மோஹித்து மஹா பிரயத்னத்தி னாலே தோழிமார் தேற்றத் தேர்ந்து, தன் விடுதியிலே வந்து உன்மத்தைபோலேயிருக்க, அந்த ராஜாவும் கமல வல்லியைக்கண்டு மன்மத விகாரம் என்று கணிசித்து,— 'உனக்கு ஆர்மேலே மனஸு இருக்கிறது?'—என்று கேட்க, கமலவல்லி தனக்கு 'ஸ்ரீரங்கராஜனன்றியிலே ஒருத்தரிடத்திலேயும் மனஸு இல்லை'; தன்னை 'ஸ்ரீரங்கராஜருக்குப் பாணிக்ரஹணம் பண்ணுவியும்'— என்று சொல்ல, ராஜாவும் ஸந்துஷ்டனாய் தன் மந்திரி களுடனே ஆலோசித்து, தம்முடைய குமாரத்தி கமல

வல்லியை ஸ்ரீரங்கராஜருக்கு கன்னிகாப்ரதானம் பண்ணுவித்து பெண்ணைக் கோயிலுக்கு அனுப்பும் போது, ஸ்திரீதனமாக முன்னூற்றுப்பதின்கலம் தங்க அமுதுபடியும், அதுக்கு வேண்டின பருப்பமுதும், கொம்பஞ்சு கொடியஞ்சு கறியமுதும், அதுக்கு வேண்டின சம்பாரங்களெல்லாம் தங்கத்தாலே பண்ணுவித்து அதுகளையும், ஸ்திரீகளுக்கு ஸமங்களான(?)நூறுபரிசாரிகைகளையும் கொடுத்தனுப்பி வைக்க,—அந்தக்கமலவல்லியும் கோயிலிலே வந்து திருமண்ணுக்குள்ளே (திருமணத்தூணுக்குள்ளே ?) புகுந்து அத்ருச்யையாக,—அத்தைக்கண்டு ராஜாவும் அதிஸந்துஷ்டனாய் அநபத்யஞ்ைகயாலே தம்முடைய ஸர்வஸ்வத்தையும் பெருமாளதீனம் பண்ணி,—திருமாமணி மண்டபங்களும், திருமதிள்களும், திருக்கோபுரங்களும், திருநந்தவனங்கள் முதலானதுகளையும் கட்டிவைத்து,—தம்முடைய பட்டணமான உறையூரிலேயும் தம்முடைய குமாரத்தியையும் அதி ஸௌந்தர ரூபத்தினாலே வசீகரித்தபடியாலே அழகிய மணவாளப்பெருமாளையும் பிரதிஷ்டிப்பித்து, விமான கோபுர மண்டப ப்ராகாராதிகளையும் விஸ்த்ருதமாகக் கட்டிவைத்து அனைத்தழகும் கண்டருளப்பண்ணிக்கொண்டிருந்தான்.”

---

## 4. லக்ஷ்மீ காவ்யம்

[இது உறையூர் நாச்சியார் விஷயமாயும் ரங்கநாதன் விஷயமாயும் ஏற்பட்ட காவ்யம். இது உத்தமநம்பி திருமலாசாரியரால் எழுதப்பட்டது. இவர் தன் பெயரையும் வம்சத்தையும் ஒவ்வொரு ஸர்கத்தின் முடிவில் முத்ரையாகச்

சொல்லுவதுதவிர, இரண்டு மூன்று இடங்களிலும் சொல்லுகிறார். ஸ்ரீரங்கத்திலிருந்த பூர்வாசாரியர்களையும், கைங்கரிய பரர்களையும் சொல்லும் கவி தன் வம்சத்தில் தனக்குமுன் தன்னைப்போலொரு காவியம் எழுதின திவ்ய ஸூரி சரித்திரக்காரரைச் சொல்லவேயில்லை. உறையூர் திருப்பாணாழ்வார் அவதரித்த இடமென்றும் இவர் சொல்ல வில்லை. இதில் கந்தாடை ராமானுஜ அய்யங்காரைப்பற்றிச் சொல்லுவதால் கவி அவர்காலத்துக்குப் பிறபட்டவராவார். இந்தக் காவியம் இருப்பதாக குருபரம்பரையிலிருந்து தெரிந்து தேடினதில் பிராசீன வித்யா பிருஹஸ்பதி கும்ப கோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சடகோப ராமானுஜா சாரியாரிடத்திலும், சென்னையிலும், அடையாரிலும் இருப்ப தாகத் தெரிந்தது. இதையே வெகுநாளாகத் தேடிக் கொண்டிருந்த திவான் பஹதூர் ஸர். டி. தேசிகாசாரியாரிடம் தெரிவித்ததும், அவர் சடகோப ராமானுஜாசாரியாருடைய புஸ்தகத்தைவரவழைத்து எழுதுவதற்கும், சென்னையிலுள்ள புஸ்தகங்களோடு ஒத்துப்பார்ப்பதற்கும் வேண்டிய செலவைக் கொடுத்து சேகரம்செய்து அச்சிட்டுக்கொண்டிருக்கிறார். உறையூர் நாச்சியார் சரித்திரமும் ரங்கநாதனுடைய ஆதி ப்ரம்மோத்ஸவமும் லக்ஷ்மீ காவ்யத்தில் வர்ணித்திருக்கும் கிரமத்திலேயே சுருக்கமாய் எழுதப்படுகின்றன.]

1-ம் ஸர்—நித்யஸூரிகள், வியாஸர், ஆழ்வார் கள், பெருமாள் நாச்சியார், ஊர், கோபுரம் மண்டபம், கோயில், பூர்வாசாரியர்கள், கைங்கரியபரர்கள்—வர் ணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

[விஷ்வக்ஸேனர், ஸூத்ரவதி, கஜானனன், ஜயத் ஸேனன், ஸிம்மவக்த்ரன், காலன், ஆதிசேஷன், கருடன், ருத்ரைஸுகீர்த்திகள், பஞ்சாயுதங்கள், கௌஸ்துபம், ஸாஸ்வதி, ஹயக்ரீவன், வியாஸர், நம்மாழ்வார், திருமங்கை யாழ்வார், உடையவர், பெருமாள், நாச்சியார், கிருஷ்ணார் ஜுனர்கள், துவஜ கருடன், கோபுரநாஸிம்மன், கோபுர விநாயகர், கங்கை யமுனை, நான்முக கோபுரம், தாமோதர கோபுரம், ராமாயண மண்டபம், ஆயிரக்கால் மண்டபம்,

சந்திரபுஷ்கரிணி, பார்த்தஸாரதி, சக்கரத்தாழ்வான், வீர ஹநுமான், ஸ்ரீரங்கநாராயணஜீய்யர், பராசர வியாஸ பட்டர்கள், பெரியநம்பி, மணவாளமாமுனி, வாதூலதேசிகர், எம்பார், திருவேங்கட தாதாசாரியார், பிரதிவாதி பயங்கரம் அண்ணு, கந்தாடை ராமானுஜ அய்யங்கார், உத்தமநம்பி, திருப்பணி செய்வார், பாகவதநம்பி, ஹரித்கோத்ரிகளான 'பாரிகர்கள்', அரையர், திருமஞ்சனக்காரர், புரோஹிதர்கள், ஆரியபடர்கள், வைத்தியர்கள், புண்டரீகதாஸர்கள், கணக்குப்பிள்ளை, சேர்வைகாரன், உறையூர் வல்லி கூட்டத்தாரான தாஸிகள்—இவர்கள் வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள்.]

2-ம் ஸர்—ஆலிலையில் பள்ளிகொண்டவனும் கிருஷ்ணன் வரையுமுள்ள எல்லா அவதாரங்களை எடுத்தவனுமான ஸர்வேசுவரனே ரங்கநாதனுக வந்து ஜகம் முழுவதையும் ஆனந்திப்பிக்கிறான். ரங்கநாதனுக்கு லக்ஷ்மி, பூமி, நீளை, ஆண்டாள்—நால்வர் தவிர, சேர சோழ பாண்டியர்—முதலான ராஜபுத்திரிகளும் பத்தினிகளாயிருந்தார்கள். ரங்கநாதன் வஸந்த ருதுவில் காவேரி முதலிய இடங்களிலும், க்ரீஷ்ம ருதுவில் குளங்களிலும், வருஷ ருதுவில் சயன க்ருஹத்திலும் பத்தினிகளோடு விநோதமாய்க் காலம் கழித்தார்;—கார்த்திக பூர்ணிமையில் தீபோத்ஸவம் கண்டருளினார்;—ஹேமந்தத்தில் மார்கழி முதல்நாள் திவ்யஸூக்தியான திருப்பள்ளி யெழுச்சியினுல் பள்ளியுணர்ந்து, ஆராதனம் கண்டருளி, பிராம்மணர்களுக்கு நித்ய தானம் பண்ணி வேதபாராயணம் கேட்டு, கீதந்ருத்யங்களோடு மண்டபம் போய், நம்மாழ்வார் முதலானோர்களால் ஸேவிக்கப்பட்டு அவர்களின் ஸூக்திகளையும், அவற்றிலுள்ள சரித்திரத்தின் அபிநயத்தையும் அனுபவித்து, ஸாயங்காலம்—நின்றபோது நாட்டியமும்

போகும்போது வாத்தியமுமாய் உள்ளே எழுந்தருளினார்;—ஒன்பது நாளும் இப்படியே நடந்தது;—பத்தாம் நாள் மாயாகாராயணீ ரூபம் தரித்தார். பதினோராம்நாள் வேதபாராயணம் கேட்டருளி, வடக்குவாசல் வழியாகப்போய், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், உடையவர் மூவரையும்பாதுகைகளால் அநுக்ரஹித்து, மண்டபத்திலிருந்து நம்மாழ்வாருடைய பிரபந்தத்தையும் ந்ருத்த கீதங்களேயும் கேட்டருளி, கடைசிநாள் அவருடைய சரணுகதியையும் அங்கீகரித்தார்;—தை முதல் நாளின் உத்ஸவத்தையும் ஆயிரக்கால் மண்டபத்தில் உபயநாச்சிமார்களோடு மத்தியானம் வரையில் அனுபவித்து உள்ளே எழுந்தருளினார்;—சிசிர ருதுவிலும் தகுந்த ஸுகங்களை அனுபவித்தார்.

[திருக்கார்த்திகையன்று திருமுகப்பட்டையம் அனுப்புவதைக் கவி எழுதவில்லை. மார்கழித்திருநாள் முதல் தேதி ஆரம்பமானதுபோல எழுதப்பட்டிருக்கிறது.]

3-ம் ஸர்—பெருமாள் சயனித்திருக்கையில் பாடகர்கள் வந்து—"தாமோதரன் கோபுரத்தில் வெயில் வந்துவிட்டது; சந்தன மண்டபத்தில் வெயில் வந்துவிட்டது."—என்று பாடி எழுப்பினார்கள். பெருமாள் எழுந்திருந்து காலைக் காரியங்களை நடத்தினார். பிரம்மா, சிவன், ஸுப்ரம்மணியன், இந்திரன், கணேசன்—எல்லா தேவர்களும் வந்து பெருமாளை ஸ்தோத்திரம் செய்தார்கள்.

4-ம் ஸர்—ரங்கநாதன் ஸந்தோஷித்து வந்த காரியம் வினவினார். "உம்முடைய ஆக்ஞையினால் நான் ஸ்ருஷ்டித்த இந்த ப்ரபஞ்சத்தின் க்ஷேமத்துக்காக

சுபமான இந்தப் பங்குனியில் த்வஜாரோஹண பூர்வகமாக யாத்ரோத்ஸவத்தை நீர் அனுபவிக்க வேண்டும். சோழராஜனுக்குத் தபஸ்ஸினால் பிறந்த லக்ஷ்மியின் அம்சமான லக்ஷ்மியை நீர் கலியாணம் செய்து கொள்ளவேண்டும். நீலீ வனத்திலிருக்கும் வியாக்ராஸுரனையும் வதம் செய்யவேண்டும்."—என்று பிரார்த்தித்தார்பிரம்மா. பெருமாள் அங்கீகரித்தார். எல்லாரும் அனுமதி பெற்றுக்கொண்டு சந்திர புஷ்கரிணியில் மாத்யாந்ஹிகம் பண்ணி, நாச்சியாரை தரிசித்துப் போனார்கள். பெருமாளுடைய ஆக்ஞையின்பேரில் விஷ்வக்ஸேனர் பங்குனிபரணியில் அங்குரார்ப்பணம் செய்து, கார்த்திகையில் ஹோமம், பலி, கருடப்ரதிஷ்டை முதலியவற்றை நடத்தி, பரிவாரங்களோடு நகரசோதனை செய்தார்.

[இப்பொழுது நகரசோதனை முன்னும் கருடப்ரதிஷ்டை பின்னுமாக நடக்கிறது.]

5-ம் ஸர்—முதல் திருநாள்—ரோஹிணியன்று நல்ல முஹூர்த்தத்தில் உத்ஸவத்தை ஆரம்பிப்பதற்காக ரங்கநாதன் புறப்பட்டு, அன்னமூர்த்தி இருக்கும் மண்டபத்திலிருந்து,ஸங்கீதங்களைக்கேட்டுக்கொண்டே த்வஜாரோஹணம் நடத்தி, மத்தியானம் உள்ளே போனார்; ஸாயங்காலம் உபயநாச்சிமார்களோடு பூச்சப்பரத்தில் எழுந்தருளி, உத்ஸவத்துக்கு வந்த ராஜாக்களோடும் ஸைன்யங்களோடும் புறப்பட்டு, மூலை தோறும் ந்ருத்யங்களை அனுபவித்துக்கொண்டே வீதி வலம் வந்து, ஆரியபடாள் வாசலில் ராஜாக்கள் முதலானோரை நிறுத்தி உள்ளே போய், திருவந்திக் காப்பு

கண்டருளி, யாகசாலையில் திருமஞ்சனம் செய்து கொண்டு, ஹோமம் முதலியன ஆனதும் உள்ளே போனார்.

[அன்னமூர்த்தி த்வஜாரோஹண மண்டபத்திலேயே இப்பொழுது பின்னமாய்க் கிடக்கிறார். பெருமாள் கண்ணாடியறை எழுந்தருளினதாகச் சொல்லப்படவில்லை. கண்ணாடியறை பின்காலத்தில் சேர்க்கப்பட்டதென்று அந்தக் கட்டடமே தெரிவிக்கிறது.]

இரண்டாம் திருநாள்—மிருகசீர்ஷத்தன்று காலையில் ரங்கநாதன் மேலூர் புன்னாக தீர்த்தத்துக்கருகேயுள்ள மண்டபத்துக்குப் புறப்பட்டு, வழியே பத்ர காளி கோயிலையும் பயங்கரமான க்ஷுத்ர தேவதைகளையும் பார்த்துக்கொண்டே போய் ஸாயங்காலம் திரும்பினார். சந்திரசேகரன் 'சுகப்ரியம் என்னும் கிராமத்துக்கு வந்து அனுக்ரஹிக்கவேண்டும்'—என்று பிரார்த்தித்தான். பெருமாள் அங்கீகரித்து ஸன்னிதிக்குள் எழுந்தருளினார்.

[சுகப்ரியம் என்னும் கிராமம் கிளியனூராயிருக்கலாம்.]

6-ம் ஸர். மூன்றும் திருநாள்—திருவாதரையன்று காலையில் ரங்கநாதன் குதிரையேறி வீரர்களோடும், அரசர்களோடும், பக்தர்களோடும் புறப்பட்டு மூங்கில் காடு வழியாகவும் காவேரிக்கரை வழியாகவும் ஸுப்ரமண்யன் தபஸ் செய்த ஈசானமங்கலம் என்னும் கிராமம் போய், அங்கே தென்கரையிலுள்ளவர்களால் உபசரிக்கப்பட்டார்.

[ஸுப்ரம்மண்யன் சீயர்புரத்தில் தபஸ் செய்த விருத்தாந்தம் நம்மால்வெளியிடப்பட்ட ஸ்ரீரங்க மாஹாத்மியத்தில்

பார்க்க. ஸீயர்புர கிராமத்துக்கே ஏற்பட்ட ஈசானமங்கலம் என்னும் பெயர் இப்பொழுது ஈசான்யமண்டபம் என்று மண்டபத்தின் பெயராக மாறியிருக்கிறது. இங்கு அம்மையார் தண்ணீர்ப்பந்தல் விருத்தாந்தம் கவியினால் சொல்லப்படவில்லை.]

பிறகு, ஸ்நானம் செய்துகொண்டிருந்த உறையூர் நாச்சியாரின் கூந்தலிலிருந்து பூக்கள் விழும் காவேரியின் தென்கரை வழியாக ரங்கநாதன் கொஞ்சதூரம் வந்து, காவேரியிலிறங்கி வடகரை போனார். அவர் கையிலிருந்த மோதிரம் ஜலத்தில் வீழ்ந்தது ; அதை அவர் கவனிக்கவில்லை ; வடகரை போய், வடக்கு முகமாகவே நெடுந்தூரம் விநோதமாக "சவாரி" செய்து, நேற்று அழைத்த சுகப்ரியம் என்னும் கிராமத்தில் சிறிது நேரம் தங்கித் திருவெள்ளறை வரையிலும் போய் நீலீவனம் (திருப்பைங்கிலி) சென்றார். அங்கிருந்த வியாக்ராஸுரன் ரங்கநாதனைக்கண்டு ஒளிந்தான். அங்கே வெகுநேரம் வேட்டையாடி, கந்தஸ்தம்பேசருடைய ஸௌம்ய ஜாமாத்ருமங்கலம் (திருமணத்தூண் நம்பிவசமுள்ள அழகிய மணவாளம் கிராமம்), காவேரி தீரத்திலுள்ள வகுள தீர்த்தம் (திருவாசி), இவற்றைப் பார்வையிட்டுக்கொண்டே ஊருக்குள் பிரவேசித்து மேலவாசல் வந்ததும், மழை வெகு கடுமையாகப் பெய்தது. மழை ஓயும் வரையில் பெருமாள் உத்தமநம்பி திருமாளிகையில் தங்கி உபசாரங்களைப் பெற்றுக்கொண்டு ஸந்நிதிக்குள் போய் வாஹனத்தை விட்டிறங்கினார்.

[பங்குனி மூன்றாம் திருநாள் குதிரைவாஹனம் இந்த மழைக்குப்பிறகு உத்தமநம்பியால் பல்லக்காக மாறின விவரம் கோயிலொழுகு 124-ம் பக்கத்தில் இருக்கிறது.]

7-ம் ஸர். நாலாம் திரு—புனர்வஸுவன்று காலையில் ரங்கநாதன் புறப்பட்டு உத்தமநம்பி பிராமணர்களுக்குக் கொடுத்த அக்ரஹாரத்தின் வழியாக காவேரிக்கரையிலுள்ள கருடவாஹன மண்டபம் போய் உல்லாஸமாயிருந்தார். மத்தியானம் ஒரு தாஸி லக்ஷ்மிக்குப் பெருமாளிடமுள்ள காதலை லக்ஷ்மீ நாடகத்திலுள்ளபடியே அபிநயித்தாள். அப்பொழுது ஸூர்ய வம்சத்தவனான உறையூர் ராஜாவினால் அனுப்பப்பட்ட புரோஹிதர் பெருமாளிடம் வந்து விக்ஞாபனம் பண்ணினார் :—

'தர்மவர்மாவின் வம்சத்தவனான நிசுளாபுரி ராஜா **கரிகால் சோழன்** சந்திரவம்சத்தில் பிறந்த **தர்மதை** என்னும் மனைவியோடு ஸந்தானத்துக்காக நெடுநாள் லக்ஷ்மியை தியானித்து தபஸ் செய்தான். லக்ஷ்மி பிரத்யக்ஷமாகி—'நானே உனக்குப்பெண்ணாய் பிறக்கிறேன்.''—என்று அனுக்ரஹித்தாள். அப்படியே கொஞ்சநாளில் பெண் குழந்தை பிறந்து லக்ஷ்மியெனப்பெயரிடப்பட்டது. லக்ஷ்மி இப்பொழுது கல்யாணப் பருவத்திலிருக்கிறாள். அவளுடைய ஸ்வயம் வரத்துக்காக தேவர்களும் ராக்ஷஸர்களும் வந்திருக்கிறார்கள். ஸ்வயம்வரத்துக்கு உம்மை அழைத்து வருமாறு நான் ராஜனால் அனுப்பப்பட்டு வந்தேன். லக்ஷ்மியும் தன்னுடைய தோழி **ஹரிலேகையை** அனுப்பியிருக்கிறாள். அவள் எல்லா விஷயங்களையும் சொல்லுவாள்,''—என்று சொல்லி விடைபெற்றுச் சென்றார் புரோஹிதர்.

8-ம் ஸர்—ஹரிலேகை வந்தாள். அவள் விரும்பியபடி எல்லாரும் வெளியே அனுப்பப்பட்டார்கள்.

அவள் ரங்கநாதனுக்கெதிரில் உட்கார்ந்து ஏகாந்தமாய்ச் சொல்லுகிறாள்:—

"சோழராஜ புத்திரியான லக்ஷ்மி தோழிகளோடு காவேரியில் விளையாடிக்கொண்டிருக்கையில், நீர் ஸைனியங்களோடு குதிரைமேலேறிப் போய்க்கொண்டிருந்தீர். உம்முடைய அழகைப்பார்த்து அவள் மோஹித்துக் கிடக்கிறாள். உம்முடைய மோதிரம் காவேரி ஜலத்தில் அகப்பட்டது. இந்த மோதிரத்தை உமக்குக் கொடுக்கச்சொன்னாள்."—என்று சொல்லி மோதிரத்தைக் கொடுத்தாள். அதில் லக்ஷ்மி என்று எழுதியிருந்தது கண்டு ரங்கநாதனுக்கு மோஹமும் மகிழ்ச்சியும் மிகுந்தது.

ஹரிலேகை—நான் லக்ஷ்மியினிடம் என்ன சொல்லுகிறது?

ரங்கநாதன்—புஷ்யத்தன்று அவளுடைய ராஜதானிக்கு வருகிறேன்.

ஹரிலேகை விடைபெற்று லக்ஷ்மியினிடம் போனாள்.

9-ம் ஸர்—ரங்கநாதன் கருடவாஹனத்திலேறிப் புறப்பட்டு வீதிவலம் வந்து ஸன்னிதிக்குள் சென்றார்.

10-ம் ஸர்—5-ம் திரு—புஷ்யத்தன்று காலையில் நான்காம் ஜாமத்தில் ரங்கநாதன் ஸைன்யத்தோடும் அரசர்களோடும் பல்லக்கிலேறிப் புறப்பட்டுக் காவேரி தாண்டி உறையூர் சேர்ந்தார். கரிகால் சோழன் வந்து அடிபணிந்து, ரங்கநாதனுக்கு உத்தியானத்தில் இடம் கொடுத்து உபசரித்தான். ஸ்வயம்வரத்துக்கு தில்லை

நடராஜன், ஜம்பூபதி, ஏகாம்ரநாதன், மத்யார்ஜு னேசன் முதலான எல்லா சைவ மூர்த்திகளும் வந்தி ருந்தார்கள்.

11-ம் ஸர்—ரங்கநாதன் ஸ்வயம்வர மண்டபத் துக்குப்போக சித்தமாயிருக்கையில் சோழராஜா வந்து அழைத்தான். ரங்கநாதன் யானைமேலேறிப்புறப்பட்டு வந்து எல்லா தேவர்களுக்குமிடையே ஆஸனத்திலமர்ந் தார்.

12-ம் ஸர்—ராஜா மஹோதயன் என்னும் மந்த் ரியை அனுப்பி, பெண்ணை ஸ்வயம்வர மண்டபத் துக்கு வரவழைத்து, ஒவ்வொரு க்ஷேத்திரத்திலிருந்து வந்திருக்கும் சிவமூர்த்தி விஷ்ணுமூர்த்திகளின் பெயர் இருப்பிடம், வைபவம் முதலியவற்றைச் சொன்னான்.

[ஆண்டாள் ஸ்வயம்வரத்தில் திவ்யஸூரி சரிதக் காரர் 108 திருப்பதியிலுள்ள விஷ்ணு மூர்த்திகளை மட்டுமே வர்ணித்திருக்கிறார். இந்தக்கவி சிவமூர்த்திகளையும் சேர்த்து வர்ணிக்கிறார்.]

சோழராஜன் கடைசியில் ரங்கநாதனிடம் வந்து அவருடைய பெருமையை வர்ணித்தான். லக்ஷ்மி எல் லாருக்கும் மத்தியில் ரங்கநாதனுக்கே மாலையிட்டாள்.

13-ம் ஸர்— ராஜா முறைப்படி உறையூர் வல்லிக் கும் ரங்கநாதனுக்கும் அக்னிஸாக்ஷிகமாகக் கலியாணம் செய்து வைத்தான். அந்த ஸ்வயம்வரத்தில் அத்தனை மூர்த்திகளுக்கிடையில் ரங்கநாதனையே அழகான மாப் பிள்ளையாக உறையூர் வல்லி தீர்மானித்ததால் அவரும் அழகிய மணவாளனானார். ராஜா அநேகவிதமான

சீர்களையும் அனேகம் சேடிகளையும் கொடுத்து, ரங்க நாதனையும் உறையூர் வல்லியையும் ஊருக்கு அனுப்பினான். வழியில் வியாக்ராஸுரன் ஸைன்யத்தோடு சூழ்ந்துகொண்டான். விஷ்வக்ஸேன பரிகரமான கஜானனன் வியாக்ராஸுரனிடம் போய் 'இரண்டுநாள் முன்னரே உன்னை நீலீ வனத்தில் வேட்டையாட வேண்டியிருந்தது. நீ ஒளிந்துகொண்டாய். இப்போது கலியாணமாகி பட்டண ப்ரவேசம் செய்வதற்கு உன்னை பலியிடுகிறேன்." என்று சொல்லி, ரங்கநாதனை ஸாக்ஷியாக வைத்துக்கொண்டு, ராக்ஷஸ ஸைன்யத்தோடு கோரமாக யுத்தம்பண்ணி, வியாக்ராஸுரனையும் அவனுடைய ஸைன்யத்தையும் வதம் செய்து ஒழித்தான்.

[ரங்கநாதன் வியாக்ராஸுரனை வதம் செய்ததால் அவருக்கு "வ்யாக்ராஸுர நிஷூதந:"—என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. ரங்கநாதன் ராமாவதாரத்துக்கு முன்னரே வியாக்ராஸுரனை வதம் செய்வதற்காகக் காவேரி வந்து ரிஷிகளுக்கு தரிசனம் கொடுத்துத் திரும்பிய விவரம் நம்மால் வெளியிடப்பட்ட ஸ்ரீரங்க மாஹாத்மியத்தில் காண்க. நெடுநாள் முன் நடந்த வியாக்ராஸுர வதத்தை உறையூர் நாச்சியார் கலியாணத்தோடு சேர்த்தது யுத்தவர்ணனத்துக்கு அவகாசம கொடுப்பதற்கான கவி சாதுர்யம. இந்துமதியைக் கலியாணம் செய்துகொண்டு புறப்படும் அஜ மஹாராஜாவுக்கும் ஸ்வயம்வரத்துக்கு வந்த ராஜாக்களுக்கும் யுத்தம் நடந்ததாக ரகுவம்சத்தில் காளிதாஸ கவி வர்ணித்திருக்கிறார். ரகுவம்சத்தையே அனுஸரித்து எழுதப்பட்ட திவ்ய ஸூரி சரிதத்திலும் ஆண்டாள் ஸ்வயம்வரத்துக்குப் பிறகு திருமங்கையாழ்வார் வேடர்பறியாகவந்து ரங்கநாதனை எதிர்த்ததாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஸ்வயம்வரத்துக்கு வந்த மூர்த்திகளை திவ்யஸூரி சரிதத்திலும் லக்ஷ்மீ காவியத்திலும் வர்ணித்ததுகூட இந்துமதீ ஸ்வயம்வரத்தில் காளிதாஸ கவி ஒவ்வொரு ராஜாவையும் வர்ணித்ததை அனுஸரித்ததாகும்.

14-ம் ஸர் – ரங்கநாதன் பல்லக்கோடு வந்து சக்கரத்தாழ்வான் ஸன்னிதிக்கருகிலுள்ள வாஹன மண்டபத்தில் இறங்கி வேறு ஆஸனத்திலேறி உள்ளே போனார்.

[4-ம் திருநாள் கருட வாஹனம் வாஹன மண்டபத்திலிறங்கினதாகக் கவி சொல்லாமல் இன்று பல்லக்கு இறங்கினதாகச் சொல்லுகிறார். புஷ்யத்தில் கலியாணமென்று கவி வியக்தமாகச் சொல்லுவதால் பெருமாள் உறையூர் எழுந்தருளவேண்டியது 5-ம் திருநாள். இப்பொழுது 6-ம் திருநாள் ஆயில்யத்தன்று எழுந்தருளுகிறார். உறையூர் நாச்சியார் பிறகு யாதாயினள் என்று கவி சொல்லவில்லை.]

15-ம் ஸர்—ஆறும் திரு—ஆயில்யத்தன்று காலையில் பெருமாள் புறப்பட்டு தாமோதர கோபுரத்தின் வழியாகப் பல்லவராஜன் தோட்டம் போய், ஸாயங்காலம் யானை வாஹனத்துக்கேற்ற உடைகளோடு வந்து, யானையேற்று மண்டபத்தில் யானையேறி வீதி வலம் வந்து, வாஹனத்திலிருந்தவாறே திருவந்திக்காப்பு கண்டருளி, யானையை விட்டிறங்கி உள்ளேபோய் திருமஞ்சனம் செய்துகொண்டார்.

[பெருமாளோடு யானைமேல் அர்ச்சகர் உட்காருவதும், யானையை விட்டிறங்கி ஆண்டாளும் பெருமாளும் மாலை மாற்றிக்கொள்வதும் இங்கு சொல்லப்படவில்லை. மணவாள மாமுனி ஸன்னிதிக்குப் பல்லவராயன் மடம் என்று பெயர். கோயிலை ஆச்ரயித்திருக்கும் தேசாந்தரி ஜீயர்களுக்காக அது பல்லவராயனால் கட்டப்பட்டதென்று அங்குள்ள சிலா சாஸனமே சொல்லுகிறது. இவனே கிழக்கே பல்லவ ராஜன் தோட்டம் என்று பெருமாளுக்கு ஸமர்ப்பித்ததாகத் தெரிகிறது.]

16-ம் ஸர்—ஏழாம் திரு—மகத்தன்று ரங்கநாதன் வஸந்தவேஷம் தரித்துக்கொண்டு உபயநாச்சிமாரோடு

சூர்ணாபிஷேகம் செய்துகொண்டார். எல்லோரும் ஒருவர்மேலொருவர் மஞ்சள் பொடியைத் தூவி விளையாடினர். ரங்கநாதன் ஸாயங்காலம் புறப்பட்டுக் கொட்டார வாசலில் நெல் அளவு கண்டருளி, ப்ரதக்ஷிணமாக நாச்சியார் கோயில்போய், இருபுறமும் வரிசையாய் நிற்கும் தாஸிகள் மூலம் திருவந்திக்காப்பு செய்துகொண்டு, ஸிம்மாஸனத்தில் வீற்றிருந்து திருமஞ்சனம் முதலியவற்றை அநுபவித்து, பூந்தேரில் புறப்பட்டு, மூலைதோறும் நர்த்தனங்களைப் பார்த்துக் கொண்டே வீதிவலம் வந்து உள்ளே போனார்.

[இப்பொழுது பூந்தேர் முன்னும் திருமஞ்சனம் பின்னுமாக நடக்கிறது. கவியின் காலத்தில் நடந்த விதம் எப்பொழுது மாறினதோ? பாஞ்சராத்ரப்படி நடக்கிற ஜலக்ரீடை இங்கு சொல்லப்படவில்லை.]

எட்டாம் திரு—பூரத்தன்று காலையில் ரங்கநாதன் ஸ்ரீரங்கத்தின் எல்லையைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டு பத்ர ஸுபத்ரர்கள் உள்ள (நாழிகேட்ட) வாசல் வந்து, பஞ்ச கோபுரங்களையும் தாண்டி வாமனாச்ரமத்தைப் பார்த்துக்கொண்டே தென் திருக்காவேரியின் வடகரை சென்றார்.

[வாமனப் பெருமாளுக்கு ஸ்ரீரங்கத்தில் உபநயனம் நடந்ததாக பாஞ்சராத்ர பாரமேச்வர ஸம்ஹிதையிலிருக்கும் விவரம் நம்முடைய ஸ்ரீரங்க மாஹாத்மியத்தில் காண்க. கவி பஞ்ச கோபுரங்களுக்கும் வெளியே என்று கணக்கிட்ட ரீதியில் தெற்கு ராயகோபுரத்துக்கு உள்பட்ட திருக்குறளப்பன் ஸன்னிதியே வாமனாச்ரமம் என்று தெரிகிறது. இந்த ஸன்னிதி புராணப்ரஸித்தமென்று கோயிலொழுகிலும் சொல்லப்பட்டிருக்கிறது.]

ரங்கநாதன் காவேரிக் கரையிலிருந்து கிழக்கே போய், வடக்கே திரும்பி, ஸ்ரீரங்கத்துக்கும் மாதங்க வனத்துக்கும் (திருவானைக்காவலுக்கும்) உள்ள எல்லைக் கல்லையும், வழியிலிருந்த ஜம்பூபதி ஸைன்யத்தையும், தாமோதர கோபுரத்தையும் பார்த்துக்கொண்டே கின்னர கிம்புருஷ கந்தர்வர்கள் வஸிக்கும் ச்வேதாங் கணம் என்னும் பில்வ தீர்த்தம்போய், வடதிருக் காவேரி தாண்டி, கதம்ப தீர்த்தத்தின் வழியாகத் திரு மங்கையாழ்வாருடைய மண்டபம் போனார்; ஸாயங் காலம் குதிரையேறிப் புறப்பட்டு, காவேரியில் விளை யாடி, வடக்கு வாசல் வழியாக ப்ரவேசித்து, மூலை களில் ந்ருத்தங்களை அனுபவித்துக்கொண்டே வீதி வலம் வந்து உள்ளே எழுந்தருளினார்.

[கதம்ப தீர்த்தம் திருமங்கையாழ்வாருடைய ஸ்தானம். இன்னும் அவர் பேரிலேயே பட்டா இருக்கிறது. எல்லைக் கரை ஆஸ்தானமண்டபம் லக்ஷ்மீ காவ்யத்துக்குப்பிறகு கொள்ளிடத்தின் தென் கரையில் ஏற்பட்டதால் பெருமாள் கதம்ப தீர்த்தத்துக்கு மாசி உத்ஸவத்தில் எழுந்தருளுகிறார். ஸ்ரீரங்கத்தாருக்கும் திருவானைக்காவலாருக்கும் நேர்ந்த எல்லைச் சண்டை இங்கு சொல்லப்படவில்லை யாகையால் இந்தக் காவியத்துக்குப்பிறகு அது நேர்ந்திருக்கவேண்டும்.]

17-ம் ஸர்—9-ம் திரு—உத்தரத்தன்று காலையில் பெருமாள் ரதயாத்திரை செய்து நாச்சியார் கோயி லுக்குப் போனார்.

[இப்பொழுது நாச்சியார் கோயிலுக்குப் போவது முன் னும் ரதயாத்திரை பின்னுமாய் நடக்கிறது. நாச்சியார் கோயிலில் பிரணய கலஹம கத்யத்ரய கோஷ்டி முதலியன இங்கு சொல்லப்படவில்லை.]

18-ம் ஸர்—ரங்கநாதன் தீர்த்தவாரிக்காக வட திருக்காவேரி போய் வருணஸூக்தம் சொல்லும் ரித்விக்குகளோடு ஸ்நானம் செய்தார். கூட வந்தவர்கள் எல்லாரும் ஸ்நானம் செய்தார்கள். ரங்கநாதன் ஸன்னிதிக்கு எழுந்தருளினார்.

[இப்பொழுது பெருமாள் நாச்சியாரோடு கூடவே இருந்துவிடுவதால் தீர்த்தவாரிக்கு செல்வர் மட்டும் வட திருக்காவேரி எழுந்தருளுகிறார்.]

10-ம் திரு—ஹஸ்தத்தன்று மத்தியானத்துக்கு மேல் பெருமாள் மண்டபத்தில் திருமஞ்சனம் செய்து கொண்டு பாஞ்சராத்ர முறைப்படி புஷ்பயாகம் செய்தார்.

பிறகு மேளவாத்தியங்களோடு ஸப்தாவரணங்களையும் பிரதக்ஷிணம் செய்வதற்காக வெளியே போய் ஐந்து ப்ரகாரங்களையும் பிரதக்ஷிணம் செய்து, ஆரியபடாள் கோபுரத்துக்கு நேராக வடக்கே பார்த்து நின்று, பூர்வராஜாக்களாலும் வர்த்தமான ராஜாக்களாலும் செய்யப்பட்ட கைங்கரியங்களைப்பற்றிய ஸ்ரீஸூக்தியைக்கேட்டு, தீர்த்தம், துளஸி, சந்தனம், மாலை முதலியன அனுக்ரஹித்து தேவதை முதலானோரை உத்வாஸனம் பண்ணி, பத்ர ஸுபத்ரர்கள் உள்ள கோபுரம் (நாழிகேட்ட வாசல்) தாண்டி, கருட விஷ்வக்ஸேனர்கள் இருக்கும் பிராகாரத்தையும், துர்கை கஜானனர்களிருக்கும் பிராகாரத்தையும் பிரதக்ஷிணம் செய்து கொண்டு ரங்கநாதன் உள்ளே எழுந்தருளினார்.

[பெருமாள் திருவிண்ணாழியையும் பிரதக்ஷிணம் செய்ததாகவும் ஸப்த ப்ராகாரங்களிலும் மேளவாத்தியங்களோடும்

எழுந்தருளினதாகவும் தெரிகிறது. ராமானுஜ நூற்றந்தாதிக்காக மேளமில்லாமல் எருந்தருளுவதும், உடையவர் ஸன்னிதிக்கு எழுந்தருளுவதும் இங்கு சொல்லப்படவில்லை. ஸப்தாவரணத்தோடு காவியம் பூர்த்தியாகிறது. ஆடும் பல்லக்கு சொல்லப்படவில்லை.]

---

## 5. ஸ்ரீரங்கராஜ சரித பாணம்

[பாணம் என்பது நாடகம்போலுள்ள ஒரு ரசனை. இது கௌண்டின்ய கோத்ரியான ஸ்ரீனிவாஸ கவியால் எழுதப்பட்டது. இவருடைய காலம் தெரியவில்லை. இந்தப் புஸ்தகம் 1881, 1891-ம் வருஷங்களில் கிரந்த எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. ரங்கநாதன் ஒவ்வொரு நாயகியோடும் கிரீடித்துக்கொண்டு உறையூர் நாச்சியாரிடம் போய், அவளைக் கலியாணம் செய்து கொள்வதையும், அவளுக்குப் பெருமாளிடம் காதல் உண்டான விவரத்தையும், பங்குனி உத்தரத்தன்று ஸ்ரீரங்க நாச்சியாருக்கு உண்டாகும் பிரணய ரோஷத்தையும் இந்தக் கவி வெகு ரஸமாகச் சொல்லுகிறார். இந்த கிரந்தத்திலுள்ள கடைசி இரண்டு விஷயங்கள் மட்டும் இங்கு அவசியமாதலால் எழுதப்படுகின்றன.]

[ரங்கநாதன் உறையூர் வல்லியைக் கலியாணம் செய்து கொண்டு அவளை மடியில் வைத்து விளையாடிக்கொண்டிருக்கிறார். அப்பொழுது அவளுடைய தாய் நிசுளையும் பெருமாளும் இவ்வாறு பேசுகிறார்கள்.]

நிசுளை—உம்முடைய கருணையினாலேயே நீர் எங்களுக்கு மணவாளப் பிள்ளையாக வாய்த்தீர். இவளுடைய செய்தியைச் சொல்லுகிறேன்; கேளும்:—

பதினெட்டாம் பெருக்கன்று காவேரிக்குப் பொட்டும் புடவையும் விடுத்துக் கரையில் நின்ற உம்மழகைப் பார்த்து இவள் ஆசைப்பட்டாள்.

நீர் குறுத்துக்களால் அலங்கரித்த பல்லக்கிலேறி ஒரே மூச்சிலேோடி ஆண்டாளிடம் போய் அவளுடைய மாலையை வாங்கிச் சூடியது கண்டு—"இவர் எனக்கு என்னமாகக் கிடைப்பார்".—என்று என் பெண் கவலை கொண்டாள்.

ரங்கநாதன்—இதற்கு முன்னேயே இவ்வளுடைய ஆசையை நான் தெரிந்துகொண்டேன். எப்போ என்றால்—அனேக கலச தீர்த்தங்களினால் நான் ஜேஷ்டாபிஷேகம் செய்துகொண்டு உபய நாச்சியாரோடு திருப்பாவாடையன்று ஏராளமான ப்ரஸாதத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையில் இவள் என் மனதைக் கவர்ந்துவிட்டாள்.

நிசுளா—பவித்ரோத்ஸவத்தில் 360 தரம் திருவாராதனம் செய்துகொண்டு ஆச்சரியமான முக காந்தியோடு நீர் பவித்ரோத்ஸவ மண்டபத்திலிருந்தபடியே இவள் மனதில் பிரவேசித்துவிட்டீர்.

[பவித்ரோத்ஸவத்தன்று பெருமாள் யாகசாலையிலிருந்து உள்ளே எழுந்தருளுகிறார். கவியின் காலத்தில் மண்டபம் எழுந்தருளினார்போலத் தோன்றுகிறது.]

ரங்கநாதன்—அந்த மாஸத்திலேயே உறியடியன்று நான் நாச்சிமார்களோடு வீதி வருகையில் இவள் அடிக்கடி என்னை ஸந்தோஷமாகப் பார்த்தாலும் ஒரோர் ஸமயத்தில் பார்வை கோபத்துடனிருந்தது.

நிசுளா—அடுத்தமாஸம் நவராத்திரியில் நாச்சியார் பூஜித்த குதிரைமேலேறி நீர் சமீ விருக்ஷத்தினிடம் போனதைப் பார்த்து இவள் மெய் மறந்தாள்.

ஐப்பசி மாஸத்தில் தாஸிகளின் பாடலைக் கேட்டுக் கொண்டே ஊஞ்சலாடும் உம்முடைய பக்கத்திலிருந்த நாச்சிமார்களைப் போலிருக்க இவள் ஆசைப்பட்டாள்.

ரங்கநாதன்—இத்தனையும் என்னுடைய பெருமையைக்கண்டு உண்டான ஆசைதானே!

நீளா—கார்த்திகையன்று நீர் தீபஸ்தம்பத்தைப் பார்த்துவிட்டு, திரும்பவும் ஆஸ்தானத்திலிருந்து கலியன் பாட்டுக் கேட்ட களிப்பால் ஆழ்வாருக்கு எல்லாவற்றையும் கொடுத்து ஒன்றுமேயில்லாமல் உள்ளே நடந்துபோனதை நினைத்து நினைத்து இவள் தூங்கவேயில்லை.

ரங்கநாதன்—இந்த மாஸத்திலேயே உன் பெண் செய்த காரியத்தைச் சொல்லுகிறேன் :—கைசிகத்தன்று நான் போர்வை சாத்திக்கொண்டு கைசிக புராணம் கேட்கையில் இவளைப் பார்த்தேன் ; உடனே எனக்கு எல்லாம் நூதனமாகிப் புராணமென்பதே இல்லாமல் போயிற்று !

நீளா—இன்னொரு அதிசயம் கேளும். மார்கழி மாஸத்தில் நீர் சித்திர மண்டபத்தில் ஆழ்வாராசாரியர்களோடு வீற்றிருந்து பெரியாழ்வார் பிரபந்தம் முதலாகப் பத்து நாளும் பானம் பண்ணின அமிருதத்தை எல்லாருக்கும் கொடுப்பதற்காக தரித்துக்கொண்ட மோஹினி ரூபத்தைக்கண்டு இந்தப் பெண் வெட்கிப் போனாள்.

முக்த சேதனன் அர்ச்சிராதி மார்க்கமாய்ப்போவதை ஏகாதசி முதல் அனுகரித்து பக்தர்களை அனுக்

ரஹிப்பதற்காக நீர் ஆயிரக்கால் மண்டபம் போய் ஆழ்வாருடைய பிரபந்தத்தைக்கேட்டு அவரை ஆனந்திப்பித்த குணத்தையே இவள் பாடிக்கொண்டிருக்கிருள்.

இதிலேயே நீர் எட்டாம் திருநாள் குதிரை மேலேறி வையாளி விளையாடுகையில் கூட்டமாய் வந்து எதிர்த்து வழிப்பறி செய்த கலியனை அனுக்ரஹித்தது கண்டு இவள் ஆச்சரியப்படுகிருள்.

இந்த உத்ஸவத்திலேயே நீர் நித்தியம் ராத்திரி ஏகாந்தத்தில் ஸங்கீதம் கேட்பதற்காகக் கூட்டமில்லாமல் உள்ளே போய், வீணை வாத்தியத்தைக் கேட்டுக்கொண்டே படியேற்றம் கண்டருளினதைப் பார்த்து இவள் திகைத்துப்போனுள்.

தை மாஸத்தில் முதல் திருநாள் நீர் உபயநாச்சியாரோடிருந்து, மற்றை நாளில் ஹம்ஸம், ஸிம்மம், கருடன், ஹனுமான், யானை—வாஹனங்களேறி, ஏழாம் நாள் உபய நாச்சிமாரோடு சூர்ணுபிஷேகம் செய்துகொண்டு, எட்டாம் நாள் குதிரையேறி விளையாடி, ஒன்பதாம் நாள் நாச்சிமாரோடு தேரிலிருந்ததைப் பார்த்து இவள் மோஹித்துப் போனுள்.

இந்தத் தோன்று ராத்திரி நாச்சியார் கோயிலில் உபசாரங்களைப்பெற்று, உபயநாச்சியாரைத் தனித்தனியாகப் பல்லக்கில் வைத்து நீர் வீதி வலம் வந்த வைபவத்தைக் கண்டு இவள் பூரித்துப் போனுள்.

கனுவன்று நீர் முத்து நகை பூண்டு மாலைப்யோதில் குதிரையேறி வேட்டை விளையாடினதைப் பார்த்து இவள் மகிழ்ந்தாள்.

மாசிமாஸத்தில் கதம்பம், வகுளம், ஆம்ரம் முதலிய தீர்த்தங்களில் உத்ஸவம் பண்ணிக் கடைசி நாள் பெரிய தெப்பத்தில் நாச்சிமாரோடு நீர் விளையாடினது கண்டு இவளும் விளையாட விரும்பினாள்.

[கதம்பம் ஆம்ரம்-இவ்விரண்டுதான் இப்பொழுது மாசி உத்ஸவத்தில் நடக்கின்றன. தீர்த்தங்களில் உத்ஸவம் நடக்கும் விவரத்தை ஸ்ரீரங்க மாஹாத்மியத்தில் காண்க.]

பங்குனி உத்தரத்தில் நீர் உபய நாச்சிமார்களை கர்பகிருஹத்திலேயே விட்டு, பெரிய பிராட்டியாரோடு ஏகாஸனத்திலிருந்ததைப் பார்த்து இவள் தானும் உம்மோடு வீற்றிருக்க விரும்பினாள்.

[கவி இங்கு பிரணய கலஹத்தைச் சொல்லாதது இவளுடைய கல்யாணம் பூர்த்தியாகாததால்.]

இன்னொரு விஷயம் நினைவுக்கு வந்தது :—இந்த உத்ஸவத்திலேயே மூன்றாம் திருநாள் சத்ர சாமராதிகளோடும், ஸைன்யங்களோடும், பெரிய கூட்டத்தோடும், மஹா வைபவத்துடன் புறப்பட்டு அகண்ட காவேரியில் நீர் அம்மையாரை நினைத்துக்கொண்டு அவளுடைய தண்ணீர்ப்பந்தலில் போய் உட்கார்ந்ததைப் பார்த்து—"இவ்வளவு சிறு பிள்ளையாயிருப்பவர்க்கு அம்மையாரிடம் ஆசை உண்டாயிற்றே."—என்று சொல்லி என் பெண் சிரித்தாள்.

[லக்ஷ்மீ காவ்யக்காரர் சொல்லாத அம்மையார் தண்ணீர்ப் பந்தலை இந்தக் கவி சொல்லுகிறார்.]

சித்திரை மாஸத்தில் நீர் த்வாஜாரோஹணம் பண்ணி, நாளுக்கொரு மண்டபமாகப் போய், விதம்

விதமான நைவேத்தியங்களை அனுபவித்து உத்ஸவம் செய்துகொண்ட அழகையும் என் பெண் பார்த்தாள்.

**ரங்கநாதன்**—அம்மா! நான் ஒன்று சொல்லுகிறேன். இந்த மாஸத்திலேயே பச்சைக் கர்ப்பூரம் குங்குமப்பூ, கஸ்தூரி, முதலிய வாஸனை த்ரவியங்களாலும் பூக்களாலும் சைத்யோபசாரம் செய்து கொண்டு, பானகம் முதலியவற்றால் நான் ஸந்தோஷப் படுகையில் இவள் தினந்தோறும் என்னெதிரிலிருந்து எனக்கு நேத்ராநந்தத்தைக் கொடுத்தாள்.

**நீளா**—வைகாசி மாஸத்தில் ஜலம் நிறைந்த அகழி நடுவே மண்டபத்தில் நாச்சிமாரோடு ஊஞ்சலில் நர்த்தனம் செய்யும் தாஸிகள்சூழ நீர் உட்கார்ந்திருப்பது பார்த்து நாச்சிமார்களுடைய பாக்கியத்தை இவள் மெச்சினாள்.

ஒவ்வொரு உத்ஸவத்திலும் சந்திர புஷ்கரணியில் நீர் தீர்த்தவாரி நடத்துவதையும், பத்தாம் திருநாள் புஷ்ப யாகத்துக்குப்பிறகு வீதிவந்து உபகார ஸ்மிருதியாக உடையவர் ஸன்னிதி த்வாரதத்துக்குப் போவதையும், படிப்புக் கேட்பதையும், கொடி யிறக்குவதையும் பார்த்து இவள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

[**உடையவர் ஸன்னிதி விஷயம்** லக்ஷ்மீகாவியக்காரரால் சொல்லப்படவில்லை.]

ஸ்வாமி! ஒவ்வொரு உத்ஸவத்திலும் ஏழாம் திருநாள் உபய நாச்சிமார்களோடு நீர் நெல் அளவிட்டு இவ்வளவென்று சொல்வதற்குப்போல நாச்சியார் கோயில் போனதைக்கண்டு இவள் மோஹித்தாள்.

ஒவ்வொரு உத்ஸவத்திலும் எட்டாம் திருநாள் நீர் எல்லையெல்லாம் சுற்றி மண்டபத்திலிருந்து குதிரையேறிக் காவேரி வழியாய்த் திரும்பும்போது இவளும் கூட வந்தாள்.

[இத்தால் எல்லைக் கரை எழுந்தருளுவது இப்போது போலப் பங்குனியில் மட்டுமில்லாமல் ஒவ்வொரு யாத்ரோத்ஸவத்திலும் உண்டென்று தெரிகிறது. கோயிலுக்கு வெளியே உள்ள மண்டபத்துக்கு எழுந்தருளுவதுகூட இப்பொழுது கோயிலுக்குள்ளேயே ஏற்பட்டுவிட்டது.]

ஒவ்வொரு உத்ஸவத்திலும் முதல் நாள் ராத்திரி நீர் யாகசாலையிலிருந்து வந்து, பெரிய பெருமாளுக்கெதிராக உட்கார்ந்து பிரதிஸரம் கட்டிக்கொண்டு, வெகு வேகமாகத் திரும்பி எழுந்தருளின அழகைக் கண்டு இவள் ஆச்சரியப்பட்டாள்.

மத்தளம், தாளம், எக்காளம் முதலிய கோஷத்தோடும், ஸ்துதி பாடகர்கள் சொல்லும் கட்டியத்தோடும், கைகூப்பி நிற்கும் ஜனங்களினிடையில், சாமரங்களுக்கு நடுவே, திருமுகத்துக் குடையின் கீழ் நீர் திருவந்திக் காப்பு கண்டருளும்போது உம்முடைய முகஜோதியைப் பார்க்கப் பார்க்க இவளுக்கு அலுக்கவேயில்லை.

தீபாவளியன்றும் யுகாதியன்றும் நீர் சந்தன மண்டபத்திலிருந்து நம்மாழ்வார் முதலானோரை வெகுமதியளித்து அனுப்பி, க்ஷணநேரம் தங்கிவிட்டு உடனே உள்ளே எழுந்தருளின அழகையே இவள் பாடிக் கொண்டிருக்கிறாள்.

ஸங்கிராந்தி முதலான தினங்களில் மேனி முழுதும் நீர் சந்தனம் பூசிக்கொண்டு ஸஹஸ்ரதாரைத் தீர்த்தத்தினால் திருமஞ்சனம் செய்துகொள்ளும் போது உம்முடைய கன்னத்தின் அழகைக் கண்டு இவள் முத்தமிடப் புறப்பட்டாள்.

ரங்கநாதன்—உன் பெண் தன்னுயிராலேயே என்னை அங்கீகரித்துவிட்டாள்.

நிசுளை—ஒன்றுமாத்திரம் பெண் புத்தியால் கேட்டுக்கொள்கிறேன்: உம்முடைய மற்றை மஹிஷி களைப்போல இவளையும் பாவிக்கவேண்டும்.

ரங்கநாதன்—இந்த ஸபையில் இப்படி ப்ரதிக்ஞை பண்ணித் தருகிறேன்: இவள் எனக்கு லக்ஷ்மியைப் போல பிரியாத பத்தினி. லக்ஷ்மியைப்போல இவளை யும் தனிக்கோயிலில் வைத்து, இவளுக்கு ஸகல போகங் களையும் கொடுக்கிறேன். வருஷத்துக் கொருமுறை இந்த நகரம் வந்து ஒரு நாள் இவளோடிருக்கிறேன்.

[ரங்கநாதன் ஸ்ரீரங்கம் வந்து நாச்சியார் கோயிலுக்குப் போய் கதவைத் தட்டிக் கூப்பிடுகிறார்.]

கண்ணே! யார் அங்கே? ரங்க ரஸிகன்;
இங்கென்ன போம்! நான் உன்னுடைய காந்தன்;
அவர் இங்கில்லை—விளையாடப் போயிருக்கிறார்;
உன்னைவிட்டு அவர் எங்கே விளையாடுவது?
பாக்யசாலியான ப்ரியை எங்கே யிருக்கிறாளோ!
உன்னைவிட அவருக்கு ப்ரியை யார்?
நிசுளைக்கு நாதனுடைய கன்யாரத்னம் இருக் கிறாளே!

[ரங்கநாதன் கதவைத் திறந்து உள்ளேபோய் நாச்சியாரிடம் உட்கார்ந்து அவளை ஸமாதானப்படுத்தினார்.]

நாச்சியார்—உம்முடைய மேனி மிக்க மிருது வென்று நான் கெட்டியாகக்கூட கட்டியணைந்ததில்லை; அழுத்தமாயும் முத்தமிட்டதில்லை. கொஞ்சம்கூட தயவேயில்லாமல் யார் உம்மை இப்படிக் காயப் படுத்தியது ?

ரங்கநாதன்—அப்படி நினையாதே. நேற்று ராத்திரியே நான் ஊரைவிட்டு நீலீவனம் போய்ராக்ஷஸனைக் கொன்று ரிஷிகளை ஸந்தோஷப்படுத்தி, இப்போது தான் வருகிறேன். சத்துரு புலியாயிருந்தாலும் இடம் காடாயிருந்தாலும் யுத்தத்தில் உடம்பெல்லாம் காயமாயிற்று. நான் நிஜத்தைச் சொல்லுகிறேன். பொய் சொன்னதுமில்லை; சொல்லப்போகிறதுமில்லை.

நாச்சியார்—(கடகடவென்று சிரித்துக்கொண்டு) வியாக்ராஸுரனை இன்று கொன்றதும் நிஜம்! நீலீ வனத்தில் முள் இருப்பதும் நிஜம்!

ரங்கநாதன்—நம்பிக்கையில்லையானால்தேவர்களின் முன்னால் ஸத்தியம் பண்ணுகிறேன்; நெருப்பைக் கையிலேந்துகிறேன். கொடிய பாம்பையும் கையில் பிடிக்கிறேன்; ஸ்ரீயான நீதான் எனக்கு ப்ரியமானவள்.

நாச்சியார்—நீரே ஸத்யமான பரமபுருஷன். தேவர்கள் உம்முடைய துளி மாயையாலும் வஞ்சிக்கப் படுவார்கள். உம்முடைய முகமே நெருப்பு. பாம்பே உமக்குப் படுக்கை. நீர் ச்ரிய : ஸ்ரீ :—(ஸ்ரீக்கும் ஸ்ரீயா யிருப்பவர்).

**ரங்கநாதன்**—பதில் சொல்ல இடமில்லாமல் பேசுகிருளே! குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்கவேண்டியதுதான்." (என்று மன்னிப்புக் கேட்கிருர். நாச்சியாரும் மன்னித்தாள்.)

---

## 6. ஆதி ப்ரம்மோத்ஸவம்

விபீஷணன் ரங்கவிமானத்தை அயோத்தியிலிருந்து லங்கைக்குக் கொண்டுபோகையில் மாத்யாந்ஹிகத்துக் காக புஷ்கரிணிக் கரையில் வைத்தான். அப்பொழுது உறையூரில் ராஜாவாயிருந்த தர்மவர்மா விபீஷணனை உபசரித்து இங்கேயே சில நாள் இருக்கும்படியாக ப்ரார்த்தித்தான். மறுநாள் பிரம்மா ஏற்படுத்தின உத்ஸவத்தை நடத்தவேண்டிய தினமாகையால் லங்கைக்குப் போக விரும்பின விபீஷணன் தர்மவர்மாவின் பிரார்த்தனையிஞல் இவ்விடமே உத்ஸவத்தை நடத்திஞன். (ஸ்ரீரங்க மாஹாத்மியம் பார்க்க) ஸ்ரீரங்க மாஹாத்மியத்திலும் லக்ஷ்மீ காவ்யத்திலும் சொன்ன ப்ரகாரமே பங்குனி ரோஹிணியில் துவஜாரோஹணம் ஆகி பத்துநாள் உத்ஸவம் இப்பொழுதும் நடக்கிறது. இந்த உத்ஸவத்தின் விவரம் சுருக்கமாகப் பின்வருமாறு.

**1-ம் திரு**—துவஜாரோஹணம், பேரீதாடனம், உபயநாச்சியாரோடு திருவீதி, யாகசாலையில் பெருமாளுக்குத்திருமஞ்சனம், பஞ்சகுண்டஹோமம், ஸன்னிதிவாசலில் யாத்ரா தானம்.

2-ம் திரு—பெருமாள் காலையில்வீதி எழுந்தருளு வதில்லை. அம்பட்ட மண்டபத்துக்கு எழுந்தருளுவ தாக ஐதிஹ்யம். ஆனால் கருடமண்டபத்திலேயே மண்டபப்படியாகி சீக்கிரம் உள்ளே எழுந்தருளுவார். இன்றைய மண்டபப்படிசெலவுமட்டும் திருச்சி பரியாரி களுடையது.

3-ம்திரு—சீயர் புரத்துக்காக ராத்திரியே பெரு மாள் பல்லக்கில் புறப்பட்டு ப்ரதக்ஷிணமாய் வடக்கு வாசல் வழியாக மேலூர் போய், விருக்ஷி தீர்த்தத்தில் தீர்த்தம் ஸாதித்து, கொள்ளிடத்திலிறங்கி சிலையாத்தி போய், மீண்டும் கொள்ளிடத்திலிறங்கி, காவேரியையும் தாண்டி இரவெல்லாம் வழிநடந்து, உதயம் சீயர்புரம் அம்மையார் தண்ணீர்ப்பந்தலில் தத்யோதனமும் மாங் காய் ஊறுகாயும் அமுது செய்து, மண்டபத்தில் ஆரா தன நைவேத்தியம் கண்டருளி,ஸாயங்காலம் புறப்பட் டுக் காவேரி தாண்டி, மேலூர் வழியாக வந்து வடக்கு வாசல் பிரவேசித்து, வீதி எழுந்தருளி உள்ளே போவார்.

4-ம் திரு—பெருமாள் காலையில் பல்லக்கில் புறப் பட்டு கொள்ளிடம் இறங்கி, நொச்சியத்துக்கு மேற்கில் ஸ்ரீரங்கராஜ புரத்திலுள்ள ரெட்டிராயர் மண்டபத்தி லிருந்து ஸாயங்காலம் கருடவாஹனத்தில் புறப்பட்டு வீதி யெழுந்தருளி உள்ளே போவார்.

5-ம் திரு—காலை சேஷவாஹனத்தில் வீதி யெழுந் தருளி, மத்தியானம் சேஷ ராய மண்டபத்திலிருந்து ஸாயங்காலம் கல்ப விருக்ஷத்தில் வீதி யெழுந்தருளி

உள்ளே போய், விடியற்காலையில் புறப்பட்டு உறையூர் எழுந்தருளுவார்.

6-ம் திரு—உறையூருக்குப் பெருமாள் எழுந்தருளும்போது 10 மணியாகும். பெருமாள் பல்லக்கோடு சந்தன மண்டபத்தில் எழுந்தருளுவார். திருக்காப்பு சேர்த்துவெளியே தாஸிகள் பாட்டும் மேளவாத்தியமும் முழங்கும். ஸன்னிதிக் கெதிரில் பல்லக்கோடு எழுந்தருளின பெருமாள் பல்லக்கிலேயே நாச்சியாருக்கு நேராக எழுந்தருளி, புது வஸ்திரம் சந்தனம், திலகம், மாலை முதலியன சாத்திக்கொண்டு, களைந்த மாலையை நாச்சியாருக்கு அனுப்புவார். நாச்சியார் மாலையணிந்து கொண்டபிறகு, ஏகாந்த ப்ரஸாதம் நிவேதனமாகும். முதலில் பெருமாளும் பிறகு நாச்சியாரும் வெளி மண்டபத்தில் எழுந்தருளி, திருவாராதனம் முதலியன ஆகும். ராத்திரி 10 மணிவரையில் பெருமாள் எல்லாருக்கும் ஸேவை ஸாதித்து, நாச்சியாரை உள்ளே அனுப்பிப் புறப்பட்டு, ஸ்ரீரங்கம் வந்து வெளியாண்டாளோடுமாலை மாற்றிக்கொண்டுஉள்ளே எழுந்தருளுவார்.

7-ம் திரு—பெருமாள் காலையில் வீதி எழுந்தருளுவதில்லை; ஸாயங்காலம் உபய நாச்சிமாரோடிருந்து ஜலக்ரீடை, சூர்ணாபிஷேகம், நெல்அளவு—இவை ஆனதும் வீதியெழுந்தருளி, நாச்சியார் கோயிலில் திருமஞ்சனம் செய்துகொண்டு உள்ளே போவார்.

8-ம் திரு—பெருமாள் காலையில் திருவீதி எழுந்தருளாமலே தெற்குவாசல் வழியாகக் கிழக்கேபோய், அசுவத்த தீர்த்தத்தில் தீர்த்தம் ஸாதித்து, வேலேந்தி

தாஸருக்கு ஆனையேற்றம் அனுக்ரஹித்து, வழியில் அவ்வோ இடங்களில் ஸ்தலத்தார்களையும் அனுக்ரஹித்து, பில்வ தீர்த்தத்தில் தீர்த்தம் ஸாதித்து எல்லைக்கரை மண்டபம் போய், எல்லைக்கரை ராமானுஜனையும் ஸ்ரீரங்க நாராயணஜிய்யரையும் அனுக்ரஹிப்பார்; ராத்திரி குதிரை வாஹனத்தில் புறப்பட்டுக் கொள்ளிடம் இறங்கி வடக்கு வாசல் வழியாக ஊருக்குள் பிரவேசித்து, கோரதத்தினடியில் வையாளி ஆகி உள்ளே எழுந்தருளுவார்.

9-ம் திரு. பங்குனி உத்தரம்—பெருமாள் காலையில் பல்லக்கில் புறப்பட்டு சித்திரை வீதி உள் திருவீதிகளில் வலம் வந்து நாச்சியார் ஸன்னிதிக்குள் போகையில் கதவுகள் சாற்றப்பட்டு, தாஸிகள் புஷ்பங்களையும் பழங்களையும் எறிந்து பெருமாளைத் தடுத்து வெளியே நிறுத்தி வைப்பார்கள். கதவு திறக்கும்போது பெருமாள் உள்ளே போவதும் கதவு சாற்றும்போது பெருமாள் பின்னால் ஒதுங்குவதுமாயிருக்கும். பெருமாள் நாச்சிமார்களுக்கு ஸமாதானம் பண்ணி வைப்பதற்காக நம்மாழ்வார் வருவார் பெருமாள் தான் சொல்ல வேண்டியவைகளை அரையரிடம் சொல்லி ஆழ்வாரை மத்தியஸ்தமாகக் கொண்டு நாச்சியாரிடம் தெரிவிப்பதற்காக இருவரையும் அனுப்புவார். அரையர் ஆழ்வாரோடு உள்ளே போய் நாச்சியாருடைய பரிகரமான பண்டாரியினிடம் பெருமாள் சொன்னதைச் சொல்லி பண்டாரி சொல்லும் நாச்சியார் வார்த்தையைப் பெருமாளிடம் ஆழ்வாரோடு வந்து சொல்லுவார். பெருமாள் சொல்லுவது அஞ்சு வார்த்தை, நாச்சியார்

சொல்லுவது அஞ்சுவார்த்தை. இந்தப் பத்து வார்த்தைக்குப் பத்து பாட்டு வெகு அழகாக முன்னோரான அரையர்களால் செய்யப்பட்டு இப்பொழுதும் சோல்லப் படுகிறது. பாட்டு அரையர்களிடமே இருக்கிறது. வார்த்தைமட்டும் "மட்டையடி" என்று விகாரமாகப் பெயர்பெற்ற புஸ்தகமாய் வெளியாயிற்று. அந்த வார்த்தை பின் வருமாறு:—

நாம் உத்ஸவார்த்தமாகப் புறப்பட்டருளி, திருவீதிகளெல்லாம் வலம் வந்து தேவதைகள் புஷ்ப வர்ஷம் வர்ஷிக்க, ப்ராம்மணர்களெல்லாரும் ஸ்தோத்திரம் பண்ண,—இப்படி பெரிய மனோரதத்தோடே தங்களிடத்தில் வந்தால், தாங்க ளெப்போதும் எதிரே விடைகொண்டு திருக்கை கொடுத்து, உள்ளே எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோய், திவ்ய ஸிம்மாஸனத்தி லேறியருளப்பண்ணி, திருவடிவிளக்கி, திருவொத்துவாடை சாத்தி, திருவால வட்டம் பரிமாறி, மங்களாலத்தி கண்டருளப்பண்ணி, சுருளமுது திருத்தி ஸமர்ப்பித்து,—இப்படி அனேக உபசாரங்களெல்லாம் நடக்குமே. இன்றைக்கு நாமெழுந்தருளின விடத்திலே திருக்காப்பு சேர்த்துக்கொண்டு, திருமுக மண்டலத்தைத் திருப்பிக்கொண்டு, திருச்சேவடிமார்கள் கைகளாலே பந்துகளாலும் பழங்களாலும் விட்டெறிவித்து, இப்படியொருநாளும் பண்ணாத அவமானங்களை யெல்லாம் இன்றைக்குப் பண்ணவந்த காரியம் ஏதென்று கேட்டுவரச் சொல்லிப்—பெருமாளருளிச் செய்த ப்ரகாரம்.

தாம் எப்போதும்போல எழுந்தருளினதே மெய்யானால்—திருக்கண்களெல்லாம் சிவந்திருப்பானேன்? திருக்குழல் கற்றைகளெல்லாம் கலைந்திருப்பானேன்? கஸ்தூரி திருமண் காப்பு கரைந்திருப்பானேன்? திருவதரம் வெளுத்திருப்பானேன்? திருக்கழுத்தெல்லாம் நக க்ஷதங்களா யிருப்பானேன்? திருமேனியெல்லாம் குங்குமப்பொடிகளாக யிருப்பானேன்? திருப்பரிவட்டங்களெல்லாம் மஞ்சள் வர்ணமா யிருப்பானேன்? திருவடிகளெல்லாம் செம்மஞ்சக் குழம்பா யிருப்பானேன்? இப்படிப்பட்ட அடையாளங்களைப் பார்த்து நாச்சியாருக்கு மிகவும் திருவுள்ளம் கலங்கியிருக்கிறது. ஆனபடியினாலே, உள்ளே யிருக்கிறவர்களை வெளியிலே விட வேண்டாமென்றும், வெளியிலே யிருக்கிறவர்களை உள்ளே விடவேண்டாமென்றும்—இப்படி கட்டுப்பாடு பண்ணிக்கொண்டிருக்கிற ஸமயத்திலே உள்ளே விண்ணப்பம்செய்ய ஸமயமில்லை. ஆனபடியினாலே நேற்றைக்கெழுந்தருளின விடத்திலேதானே இன்றைக்குமெழுந்தருளச்சொல்லி—நாச்சியாரருளிச் செய்த ப்ரகாரம்.

திருக்கண் சிவந்திருப்பானே னென்றால்—நாம் செங்கோலுடைய திருவரங்கச் செல்வரானபடியினாலே கவிரி முடித்து, கல்கச்சை கட்டி, வல்லய மேந்தி, குதிரை நம்பிரான் மேலே ராத்திரி முழுவதும் நித்திரையின்றி ஜகத்ரக்ஷணார்த்தமாக ஜாகரூகனாயிருந்தபடியினாலே திருக்கண் சிவந்துபோச்சுது. திருக்குழல் கற்றைகளெல்லாம் கலைந்திருப்பானேனென்றால்—காற்றடித்து கலைந்து போச்சுது. கஸ்தூரி திருமண் காப்பு கரைந்திருப்பானேனென்றால்—அதி கடோரமான

ஸூர்ய கிரணத்தால் கரைந்து போச்சுது. திருவதரம் வெளுத்திருப்பானேனென்றால்-அஸுர நிரஸனார்த்தம் தேவதைகளுக்காக சங்கத்வானம் பண்ணினபடியினாலே வெளுத்துப் போச்சுது. திருக்கழுத்தெல்லாம் நகக்ஷத மாயிருப்பானே னென்றால்—அதிப்ரயாஸமான காடுகளிலே போகிறபோது பூ முள்ளு கிழித்தது. திருமேனியெல்லாம் குங்குமப்பொடிகளா யிருப்பானே னென்றால்—தேவதைகள் புஷ்ப வர்ஷம் வர்ஷித்த படியினாலே புஷ்பரேணு படிந்தது. திருப்பரிவட்டங்களெல்லாம் மஞ்சள் வர்ணமா யிருப்பானேனென்றால்-ஸந்த்யா ராகம் போலே யிருக்கிற திவ்ய பீதாம்பரமானபடியினாலே உங்கள் கண்ணுக்கு மஞ்சள் வர்ணமாகத் தோன்றுகிறது. திருவடிகளெல்லாம் செம்மஞ்சக்குழம்பாயிருப்பானேனென்றால்—குதிரை நம்பிரான் மேலேறி அங்கவடிமேல் திருவடிகளை வைத்துக் கொண்டு போனபடியினாலே திருவடிகள் சிவந்து போயின. இப்படிப்பட்ட அடையாளமே யொழிய வேறில்லை. ஆனால், போதுகழித்து வருவானேனென்றால்—வேட்டையாடி வேர்த்து விடாய்த்து வருகிற ஸமயத்திலே திருமங்கையாழ்வாளென்பவன் ஒருவன் வந்து, ஸர்வஸ்வாபஹாரத்தையும் பண்ணிக்கொண்டு போனான். அவனைச் சில நல்ல வார்த்தைகளைச் சொல்லித் திருவாபரணங்களை மெள்ள வாங்கிக்கொண்டு போய் கருகூலத்தில் எண்ணிப் பார்க்குமிடத்தில் கணையாழி மோதிரம் காணாமல் போச்சுது. அதற்காக விடிய பத்துநாழிகைக்குப் புறப்பட்டருளி திருவீதிகளெல்லாம் வலம்வந்து, கணையாழி மோதிரத்தைக்

கண்டெடுத்துக்கொண்டு மீளவாரா நிற்கச்செய்தே, அப்பொழுது தேவதைகள் பாரிஜாத புஷ்பங்கள் கொண்டு ஸேவிக்க வந்தார்கள், நாம் நம்முடைய பெண்டுகளன்னியிலே சூடுகிறதில்லை யென்று நமக்கு முன்னமே வரக்காட்டி நாமும் பின்னே எழுந்தருளினோம். ஆனபடியினாலே நாம் கொடுத்த புஷ்பத்தையும் வாங்கிக் கொண்டு நம்மையும் உள்ளே அழைக்கச் சொல்லிப் பெருமாளருளிச் செய்த ப்ரகாரம்

கணையாழி மோதிரம் காணமல்போனதே மெய்யானால்—விடிய பத்து நாழிகைக்குப் புறப்பட்டருளி உறையூரிலே போய், மின்னிடை மடவார் சேரியெல்லாம் புகுந்து, யதாமனோரத மநுபவித்து உண்டாயிருக்கிற அடையாளங்களெல்லாம் திருமேனியிலே தோற்றுநிற்கச்செய்தேயும், அவ்வடையாளங்களையும் அந்யாதவாகக் கொண்டு, நாங்கள் ஏழைகளானபடியினாலே இப்படிப்பட்டிருக்கிற வஞ்சனோக்திகளையெல்லாம் நேற்றைக் கெழுந்தருளின விடத்தில்தானே சொல்லிக்கொண்டு இன்றைக்கும் அங்கேதானே எழுந்தருளச்சொல்லி நாச்சியாரருளிச் செய்த ப்ரகாரம்.

நாமானால் உறையூரைக் கண்ணாலே கண்டதுமில்லை; காதாலே கேட்டதுமில்லை. துஷ்டர்களாயிருக்கிறவர்களும் மனதுக்குச் சரிப்போனபடி சொன்னால் நீரும் அந்த வார்த்தைகளைத்தானே கேட்டுக் கொண்டு நம்மையும் ஒருநாளும் பண்ணாத அவமானங்களெல்லாம் பண்ணலாமா? நீங்கள் ஸ்திரீகளானபடியினாலே முன்பின் விசாரியாமல் பண்ணினீர்களாமென்கிற அவமானம் உங்களுக்கே யொழிய நமக்குத்

தேவையில்லை. ஆனபடியினாலே, நாம் கொடுத்த புஷ்பத்தையும் வாங்கிக்கொண்டு நம்மையும் உள்ளே யழைக்கச்சொல்லிப் பெருமாளருளிச் செய்த ப்ரகாரம்.

மூந்தாநாள் அழகிய மணவாளப்பெருமாள் வேட்டையாடி வேர்த்து விடாய்த்து எழுந்தருளினாரென்று அடியோங்கள் அதி ப்ரீதியுடனே எதிரே விடைகொண்டு, திருக்கை கொடுத்து, உள்ளே யெழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோய், திவ்ய ஸிம்மாஸனத்திலேறியருளப்பண்ணி, திருவடிவிளக்கி, திருவொத்துவாடை சாத்தி, திருவாலவட்டம் பரிமாறினோம். அப்போது அதிக சிரமத்தோடே எழுந்தருளியிருந்தார். ஆனால், இளைப்போவென்று வெந்நீர்த் திருமஞ்சனம் சேர்த்து ஸமர்ப்பித்தோம். அதை நீராடினது பாதியும் நீராடாதது பாதியுமாக எழுந்தருளி யிருந்தார். ஆனால், இளைப்போவென்று திருவரைக்குத் தகுதியான திவ்ய பீதாம்பரம் கொண்டுவந்து ஸமர்ப்பித்தோம். அதையும் எப்போதும் போல சாத்திக்கொள்ளாமல் ஏதோ ஒரு விதமாக சாத்தியருளினார். ஆனால், இளைப்போவென்று கஸ்தூரித் திருமண்காப்பு சேர்த்து ஸமர்ப்பித்தோம். அதையும் எப்போதும் போல சாத்திக்கொள்ளாமல் திருவேங்கடமுடையான் திருமண்காப்புபோல கோணுமாணுவாய்ச் சாத்தியருளினார். ஆனால், இளைப்போவென்று தங்கப்பள்ளயத்தில் அப்பம் கலந்த சிற்றுண்டி யக்காரம் பாலில்கலந்து, வர்கவகைகள் முதலானதுகளைச் சேர்த்து ஸமர்ப்பித்தோம். அதையும் அமுது செய்தது பாதியும் அமுது செய்யாதது பாதியுமாய் எழுந்தருளியிருந்தார். ஆனால்

இளேப்போவென்று சுருளமுது திருத்தி ஸமர்ப்பித்தோம். அதையும் அமுது செய்யாதபடிதானே எழுந்தருளியிருந்தார். ஆனால், இளேப்போவென்று திருவநந்தாழ்வானேத். திருப்படுக்கையாக விரித்து அதன் மேலே திருக்கண் வளரப்பண்ணி அடியோங்கள் திருவடிகளேப் பிடித்துக்கொண்டிருந்தோம். தாம் வஞ்சகரானபடியினலே எங்களுக்கு ஒரு மாயா நித்திரையை யுண்டாக்கி, எங்கள் கருகூலம் திறந்து, எங்கள் ஸ்த்ரீதனங்களான அம்மானே பந்து கழஞ்சி பீதாம்பரங்களேயும் கைக்கொண்டு, இன்னவிடத்துக்கு எழுந்தருளுகிறேமென்று சொல்லாதபடி எழுந்தருளுகிறேமென்றும் சொல்லாதபடி எழுந்தருளினர். அந்த உத்தர க்ஷணமே அடியோங்கள் அச்சமுடன் திடுக்கிட்டெழுந்திருந்து, திருப்படுக்கையைப் பார்க்குமிடத்தில், பெருமாளேக் காணமையாலே கைநெரித்து வாயடித்து அணுகவிடும் வாசற் காப்பாளரை யழைத்துக் கேட்குமளவில்,—அவர்கள்வந்து, அம்மானே பந்து கழஞ்சி பீதாம்பரமான ஸ்திரீதனத்தையும் கைக்கொண்டு, இன்னவிடத்துக்கு எழுந்தருளுகிறே மென்று சொல்லாதபடி யெழுந்தருளினரென்று சொல்லவந்தார்கள். அந்த உத்தர க்ஷணமே அந்தரங்க பரிஜனங்களாயிருக்கிற திருச்சேவடிமார்களே யழைப்பித்தோம். அவர்கள் வந்து அடிபிடித்து அடிமிதித்துக்கொண்டு போனவிடத்திலே, உறையூரிலே கொண்டு போய்விட்டது. அங்கே மச்சினியென்று ஒருத்திக்கு முறைமை சொல்லி, மற்றொருத்தியை மடியைப்பிடித்ததும், கச்சணி பொன் மூலே கண்ணுலழைத்ததும், கனி

வாய் கொடுத்ததும், கையில் நகக்குறி மெய்யங்கமான தும், கார்மேனியெங்கும் பசுமஞ்சள் பூத்ததுமாகக் கரும்புத் தோட்டத்தில் யானைஸஞ்சரிக்கிறாப்போலே, தேவரீர் ஸஞ்சரிக்கிறீரென்று நாங்கள் உசிதமாகப் போகவிட்ட தூதியோடி அங்கே உள்ளபடி வந்து சொன்னாள். உம்மாலே எங்கள் மனது உலை மெழுகா யிருக்கிறது. ஒன்றும் சொல்லாதே போம் போமென்று நாச்சியாரருளிச் செய்த ப்ரகாரம்.

ஒருவருக்கொருவர் ஸம்சயப்பட்டால், அந்த ஸம்சயம் ஒரு ப்ரகாரத்திலும் தீராமற்போனால், ப்ர மாணத்தாலே தீர்த்துக்கொள்வார்கள். அந்தப்படி ப்ர மாணம் பண்ணித் தருகிறோம். நாம் தேவாதிதேவ னைபடியினாலே தேவதைகளைத் தாண்டித்தருகிறோம். ஸமுத்திரத்திலே முழுகுகிறோம். அக்நிப்ரவேசம் பண்ணுகிறோம். பாம்புக் குடத்திலே கையிடுகிறோம். மழுவேந்துகிறோம். நெய்க் குடத்திலே கையிடுகிறோம். இப்படிப்பட்ட ப்ரமாணங்களையானாலும் வாங்கிக் கொண்டு, நாம் கொடுத்த புஷ்பத்தையும் வாங்கிச் சூட் டிக்கொண்டு, நம்மையும் உள்ளே யழைக்கச் சொல்லிப் பெருமாளருளிச்செய்த ப்ரகாரம்.

ஒருவருக்கொருவர் ஸம்சயப்பட்டால் அந்த ஸம்சயம் ஒரு ப்ரகாரத்தாலும் தீராமற்போனால் ப்ரமாணத்தாலே தீர்த்துக்கொள்வார்கள். லோகத் திலே ப்ராம்மணனுக்கும் ப்ராம்மணனுக்கும் வாக் குவாதம் வந்தால் ப்ராம்மணன் ப்ராம்மணனைத் தாண்டிக்கொடுப்பான். தாம் தேவாதி தேவனை படியினாலே தேவதைகளைத் தாண்டிக்கொடுக்

கிறோமென்று சொல்லவந்தீரே! அந்த தேவதைகள் தம்முடைய திருவடிகளை எப்போ காணப்போகிறோம்! எப்போ காணப்போகிறோம்!—என்று ஸதா ப்ரார்த்தித்துக் கொண்டிருக்கிறவர்களை வலுவிலே தாண்டித் தருகிறோமென்றால் வேண்டா மென்பார்களா? ஸமுத்ரத்திலே முழுகுகிறோமென்று சொல்ல வந்தீரே! ப்ரளயகாலத்திலே ஸகல லோகங்களையும் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்து ஒரு ஆலிலைத் தளிரிலே கண்வளர்ந்த தமக்கு ஸமுத்திரத்திலே முழுகுகிறது அருமையா? அக்நிப்ரவேசம் பண்ணுகிறோமென்று சொல்லவந்தீரே! ப்ரம்மாவுக்காக உத்தரவேதியில் ஆவிர்ப்பவித்த தமக்கு அக்நியில் முழுகுகிறோமென்றால் அக்நி சுடுமா? பாம்புக்குடத்திலே கையிட்டுத் தருகிறோமென்று சொல்ல வந்தீரே! சென்றாற் குடையாமிருந்தாற் சிங்காதனமாமென்று ஸதா ஸர்வகாலம் திருவநந்தாழ்வான் மேலே திருக்கண் வளர்ந்திருக்கிற தமக்குப் பாம்புக் குடத்திலே கையிட்டால் பாம்பு கடிக்குமா? மழுவேந்துகிறோ மென்று சொல்ல வந்தீரே! கோடிஸூர்ய ப்ரகாசமான திருவாழியாழ்வானை ஸதா திருக்கையிலே தரித்துக்கொண்டிருக்கிற தமக்கு அப்ரயோஜகமான இரும்பு மழு வேந்துகிறது அருமையா? நெய்க் குடத்திலே கையிடுகிறது அருமையா? இப்படிப்பட்டிருக்கிற பரிஹாஸ ப்ரமாணங்களை யெல்லாம் சரிப்போன விடத்திலேதானே பண்ணிக்கொண்டு இன்றைக்கும் அங்கேதானே யெழுந்தருளச் சொல்லி நாச்சியாரருளிச்செய்த ப்ரகாரம்.

நாம் உத்ஸவார்த்தமாகப் புறப்பட்டருளி திருவீதிகளெல்லாம் வலம் வந்து, தேவதைகள் புஷ்பவர்

ஷம் வர்ஷிக்க, ப்ராம்மணர்க ளெல்லாரும் ஸ்தோத் திரம்பண்ண, இப்படி பெரிய மனோரதத்தோடே தங் களிடத்தில் வந்தால், தாங்கள் எப்போதும்போலே ஆதரியாமல்படிக்கு அபராதங்களைப் பண்ணினே மென்றீர்கள். நாமானால் உறையூரைக் கண்ணாலே கண்டதுமில்லை, காதாலே கேட்டதுமில்லை யென்று சொன்னோம். அத்தை அப்ரமாணமாக நினைத்தீர்கள். ஆனால், ப்ரமாணம் பண்ணித்தருகிறோமென்று சொன் னோம். அத்தைப் பரிஹாஸப்ரமாணமென்று சொன் னீர்கள். இப்படி நாம் எத்தனை சொன்னபோதிலும் அத்தனையும் அந்யதாவாகக் கொண்டு சற்றும் திருவுள் ளத்தில் இரக்கம் வராமல், கோபத்தாலே திருவுள்ளம் கலங்கித்திருமுகமண்டலம் கறுத்துத் திருக்கண்கள் சிவந்து இப்படி யெழுந்தருளியிருந்தால் நமக்கென்ன கதி யிருக்கிறது? அழகிய மணவாளப் பெருமாள் ஸ்ரீரங்க நாச்சியார் ஸந்நிதி வாசலிலே தள்ளுபட்டுக் கொண்டிருக்கிறார் மென்கிற அவமானம் உங்களுக்கே யொழிய நமக்குத் தேவையில்லை. ஆனபடியினாலே, நாம் கொடுத்த புஷ்பத்தையும் வாங்கிக்கொண்டு நம்மையும் உள்ளே யழைக்கச்சொல்லிப் பெருமாளரு ளிச்செய்த ப்ரகாரம்.

தாம் வருஷாவருஷம் அடமாயெழுந்தருளியிருந்து தமக்குச் சரிப்போனபடி நடந்துபோட்டு, பின்னும் இங்கே வந்து நாமொன்று மறியோமென்றும், ப்ர மாணம் பண்ணித்தருகிறோமென்றும்—பரிஹாஸங் களைப் பண்ணி இப்படிப்பட்டிருக்கிற அக்ருத்யங் களைப் பண்ணிக்கொண்டு வருகிறீர். நாமானால் பொறுக்

கிறதில்லை. நம்முடைய அய்யா நம்மாழ்வார் வந்து மங்களமாகச் சொன்ன வாய் மொழியினாலே பொறுத்தோம். உள்ளே எழுந்தருளச்சொல்லி **நாச்சியாரருளிச்செய்த ப்ரகாரம்.**

முதல் ஏகாந்தம்—நாச்சியாரால் அனுமதிக்கப் பட்டு பெருமாள் ஸன்னிதி வாசலில் எழுந்தருளி ஆழ்வாரை மரியாதை செய்து அனுப்புவார். உறையூரில் நடந்ததுபோலவே ஏகாந்தம், தளிகை நிவேதனம் நடந்து பெருமாள் பங்குனி உத்தர மண்டபம் எழுந்தருளுவார். நாச்சியாரும் பெருமாளிடம் போய் வீற்றிருப்பாள்.

இரண்டாம் ஏகாந்தம்—செல்வர் பெரிய கோயிலி லிருந்து புறப்பட்டு வடதிருக்காவேரியில் தீர்த்தம் ஸாதித்துப் பெருமாளிடம் வந்ததும், கத்யத்ரயம் ஸேவிக்கப்படும். கத்யத்ரயம் என்னும் கிரந்தம் இன்றைய தினமே அவதரித்தது. கத்யத்ரய சாற்றுமுறைக்காக இரண்டாம் ஏகாந்தத்தளிகை நிவேதனம் ஆனதும் செல்வர் பெரிய கோயில் எழுந்தருளுவார்.

மூன்றாம் ஏகாந்தம்—பெருமாள் நாச்சியார் இருவருக்கும் பதினெட்டு ஆவ்ருத்தி திருமஞ்சனம் ஆகும். மூன்றாம் ஏகாந்தத் தளிகை நிவேதனம் முதலியவை ஆனதும் நாச்சியார் உள்ளே எழுந்தருளுவாள். பெருமாள் கோரதத்தில் திருவீதி எழுந்தருளி உள்ளே போய் கண்ணாடி யறையில் திருமஞ்சனம் செய்துகொள்வார்.

10-ம் திரு—பெருமாள் திருமஞ்சனம் செய்து கொண்டு ஸாயங்காலம் மேளமில்லாமல் உலாப்பாட்டும் ராமானுச நூற்றந்தாதியும் கேட்டுக்கொண்டே வீதி யெழுந்தருளி, உடையவர் ஸன்னிதி வாசலில் உடையவரை அனுக்ரஹித்து. அவர் செய்துவைக்கும் சைத்யோபசாரங்களையும் பெற்றுக்கொண்டு, துவஜ ஸ்தம்பத்தினடியில் படிப்புக் கேட்டு ஸன்னிதிக்குள் எழுந்தருளுவார். பிறகு ரக்ஷா விஸர்ஜனமும் துவஜ அவரோஹணமும் ஆகும்.

மறுநாள் ராத்திரி விடாயாற்றியாக ஆடும் பல்லக்கில் பெருமாள் வீதி எழுந்தருளுவார்.

பெருமாள் பங்குனி உத்தரத்தன்று நாச்சியார் ஸன்னிதிக்கு எழுந்தருளக் காரணம் என்ன? ஸ்ரீரங்கத்தில் பங்குனி உத்தரம் என்பது தந்த்ரோத்ஸவம்; அதாவது—இரண்டு உத்ஸவம். உத்ஸவம் அவரவர்களுடைய நக்ஷத்திரத்தில் ஆரம்பமாகவேண்டும்; அல்லது, முடியவேண்டும். பெருமாளுக்கு ரோஹிணி நக்ஷத்திரமாகையால் அன்று இந்த உத்ஸவம் ஆரம்பமாகி உத்தரத்தல் முடிகிறது; நாச்சியாருக்கும் ரோஹிணியில் ஆரம்பமாகி அவளுடைய நக்ஷத்திரமான உத்தரத்தில் முடிகிறது. பெருமாளுக்கு காலையிலும் ராத்திரியிலும் உத்ஸவம் நடக்கவேண்டியிருப்பதால் நாச்சியார் உத்ஸவம் தனியாக நடக்கமுடியாமல் பாவனையாக நடக்கிறது. உத்தரம் இருவருடைய உத்ஸவத்துக்கும் கடைசிநாளாதலால் நாச்சியாருடைய சேர்த்தியில் இருப்பதற்காகப் பெருமாள் இன்று அங்கே போகிறார். பிரளய கலஹ உத்ஸவம் பண்ணவேண்டுமென்ற ஆகம விதிப்படி அதற்கும் உறையூர் நாச்சியார் ஸம்பந்தம் அனுகூலமான ஸந்தர்பமாய் வாய்த்தது.

## 7. உறையூர்ச் சரித்திரம்

---

உறையூர் சோழர்களின் ராஜதானியாயிருந்தது,-திருச்சிறுப்பள்ளி கெஜடீர் 27, 30, 49 பக்கங்களில் பார்க்க.

உறையூர் ராஜாவான பராந்தகன் திரிசிரமலையில் ஸாம முனி பயிராக்கின சிவந்திப்பூவை அபஹரித்த தோட்டக்காரனை மன்னித்ததால் சிவன் கோபித்துக்கொண்டு உறையூரை மண் மாரியால் அழித்தார்.-கெஜடீர் 339ம் பக்கத்தில் காண்க. "கலியுகத்திலே பஹுகாலம் சென்ற அனந்தரம், ஒரு கால விசேஷத்திலே ஒரு சோழனுடைய பாப விசேஷத்தினாலே மண்மாரி பெய்து பட்டணம் முழுகிப்போயிற்று. அநந்தரம், அது முதலாக சோளதேசாதிபதிகள் கங்கைகொண்டானிலே வாஸம் பண்ணுகையில், கால விசேஷத்திலே உறையூரிலே கொஞ்சமாகக் கோயில் கட்டி பெருமாளையும் நாச்சியாரையும் ஒரு சோழன் பிரதிஷ்டிப்பித்தான்."—என்று கோயிலொழுகு 5-ம் பக்கத்தில் இருக்கிறது. இதில் எந்த சோழனுடைய என்ன பாபத்தினாலே மண்மாரி பெய்ததென்றும், எந்த சோழன் ஊரைப் புனருத்தாரணம் பண்ணினான் என்றும் தெரியவில்லை.

ஸுந்தர பாண்டியன் சோழராஜாக்களை ஜயித்து அவர்களுடைய பட்டணங்களான தஞ்சாவூர் உறையூர் இரண்டையும் எரித்தபிறகு அவர்களுக்கே கொடுத்து விட்டதாக தன்னுடைய ஸ்ரீரங்கம் சாஸனத்தில் சொல்லும் விவரம் கெஜடீர் 45-ம் பக்கத்திலிருக்கிறது.

உறையூர் 1820ம் வருஷத்துக்கு முன்பு துருப்புக்கள் தங்குமிடமாயிருந்தது.—கெஜடீர் 336ம் பக்கம்.

இப்படிப் பல தடவை உறையூருக்கு ஆபத்து வந்த காலத்தில் கோயிலை ரக்ஷிக்க முடியாமல் நாச்சியாரை மட்டும் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளப் பண்ணினதாகச் சொல்லப்படு கிறது. உறையூர் கமலவல்லித் தாயாரை ஸ்ரீரங்கத்திலேயே கூர நாராயண ஜீயர் பிரதிஷ்டிப்பித்த விவரம் கோயி லொழுகு 112ம் பக்கம்.

உறையூர்க் கோயிலைச் சேர்ந்த இடங்கள் இப்பொழுது குடிகளாலும் அன்ய மதத்தினராலும் ஆக்ரமிக்கப்பட்டு விட்டன. கோயிலுக் கெதிரிலிருந்த தெப்பக்குளம் இப் பொழுது அன்னியர்களால் ஆக்ரமிக்கப்பட்டதாய்த் தெரி கிறது. இப்படி ஸ்தலங்கள் பறி கொடுக்கப்பட்டதால் நாச்சியாருக்குத் தெப்பம் நடத்த இடமில்லாமல் கோயிலுக் குள்ளேயிருக்கும் சிறு புஷ்கரிணிக்குள்ளேயே தெப்பம் நடந்துகொண்டிருக்கிறது. நம்முடையதை அன்யர்களுக்கு அபஹரித்துக் கொடுக்கும் விஷயத்தில் சட்டமும் அதிகார மும் செல்லுகின்றனவேயன்றி, அன்யர்களால் ஆக்ரமிக்கப் கப்பட்ட நம்முடைய ஸ்தலத்தை நமக்கு மீட்டுக்கொடுக்க எதுவும் பயன்படுகிறதில்லை. அன்யர்களுக்குள் மதாபிமான மும் நமக்குள் அது இல்லாததுமே இம்மாதிரி துர்கதிக்குக் காரணம். தெப்பத்தன்று கோயில் கிணற்றில் தெப்பம் சுற்றின பிறகு மற்றை நாளில் வெளிவாராத நாச்சியார் அன்றும் அடுத்த நாள் பந்தக்காட்சியன்றும் வீதி வருவதைக் கொண்டே ஆதியில் தெப்பக்குளம் வெளியே இருந்ததாகத் தீர்மானிக்கலாம். உறையூர்க்கோயிலில் மணவாளப் பிள்ளை யாக நின்ற திருக்கோலமாய் ரங்கநாதனும் அவருக்கருகில் உறையூர் நாச்சியாரும் த்ருவ பேரங்களாக எழுந்தருளி யிருக்கிறார்கள். நாச்சியாரின் உத்ஸவ மூர்த்தி முன்னால் பெருமாளுடைய திருவடி நிலைகளுக்குக்கீழ் பிரதிஷ்டிக்கப் பட்டிருக்கிறது. ஸ்ரீரங்கத்துக்கு அபிமுகமாயிருக்க வேண்

டியதால் இந்த ஸன்னிதி வடக்குப் பார்த்திருக்கிறது. எதிரில் குளமும் அப்பால் காவேரியுமாய் வெகு அழகாயுள்ள ஸன்னிவேசத்தை எதிரில் வீடுகள் சூழ்ந்து விகாரப்படுத்தி விட்டன.

---

## 8. கோயில் ஜீர்ணோத்தாரணம்

மண்மாரியாலும், ராஜாக்களின் கலஹத்தில் எரிக்கப்பட்டதாலும், துருப்புக்களால் ஆக்ரமிக்கப்பட்டதாலும் உறையூர்க்கோயில் பலதடவை பல ஆபத்துக்களுக்கு உட்பட்டு மிகவும் ஜீர்ணமாயிருந்தது. பெருமாள் நாச்சியார்கள் சேர்த்தியிலிருப்பதை திருச்சிறுப்பள்ளி ஸ்ரீரங்கம் இந்த இரண்டு பெரிய ஊர்களிலிருந்து ஸேவிப்பதற்கு இன்று ஒரு நாள் உறையூர்க் கோயிலில் கூடும் கூட்டம் வேறு எங்கும் இராது. வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருக்கிற ஜன ப்ரவாஹம் சிறிது நேரமாவது கோயிலில் தங்குவதற்குக்கூட இடமில்லாமல் அனுவசியமான குறுக்குச்சுவர்களால் தடுத்து கொண்டிருந்தன. இதை மராமத்து செய்வதற்காக திவான் பஹதூர் ஸர். டி. தேசிகாசாரியாரால் லாட்டரி நடத்தி சுமார் 20,000 ரூபாய் சேகரித்து கோயிலை வெகு அழகாக ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டது. குறுக்குச் சுவர்கள் கலைக்கப்பட்டதால் கோயில் மிகப் பெரிதாகிவிட்டது. இனி கோபுரம் முதலியவைகளை ஜீர்ணோத்தாரணம் பண்ண வேண்டியது அவசியம்.

---

## ஸ்ரீரங்க மஹாத்மியம்

ஸ்ரீரங்கத்தைப்பற்றிப் புராணங்களிலும் பாஞ்சாரத்ர பாரமேசுவர ஸம்ஹிதையிலுமுள்ள ஸகல விஷயங்களையும் சேகரித்து எளிய தமிழில் பல ஆராய்ச்சிகளோடும் எழுதப்பட்டுள்ளது.

164 பக்கம் கொண்டது விலை ரூ. 0—8—0

## உத்தரகாண்ட ஸங்கிரஹம்

அதிகமாய் கவனிக்கப்படாத ராமாயண உத்தரகாண்டத்தின் ஒவ்வொரு ஸர்கமும் எளிய தமிழில் பல ஆராய்ச்சிகளோடு எழுதப்பட்டுள்ளது.

விலை ரூ. 0—6—0.

தேவஸ்தான பத்திரிகை ஆபீஸ்,
ஸ்ரீரங்கம்,

## தந்தப் பல்லக்கு

ரங்கநாதனுடைய தந்தப்பல்லக்கு மிகவும் ஜீர்ண மாயிருக்கிறது. தர்மகர்த்தாக்கள் இதைப் பிரித்து வெகு அழகான பல்லக்கு தயாரிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். கோயிலில் இப்போதிருக்கும் தந்தங்களை வைத்துக்கொண்டு மேலே வேண்டிய தந்தம் வாங்குவதற்கும் கூலிக்குமாக தர்மகர்த்தாக்கள் தனிகர்களின் உதவியைத் தேடுகிறார்கள்.

## கோரதம்

பங்குனி உத்தரத்தில் பெருமாள் எழுந்தருளும் வெகு அழகான கோரதத்தையும் புதுப்பிக்கவேண்டியிருக்கிறது. இவ்விஷயமாயும் தர்மகர்த்தாக்கள் பிரயத்தினம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கைங்கரியத்துக்கு ஸகாயம் செய்ய விரும்புகிறவர்கள் தேவஸ்தானம் காஷியரிடம் பணமாவது சாமானாவது செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம்.